மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

இல்லம் : 10 சுற்றம் : 4 / ஏப்ரல் 2020 / ஆசிரியர் : விசவனூர் **வே.தளபதி** / விலை : ரூ.10/-




## கொரோனா எழுப்படும் கேள்விகள்



**கிங் நோய்த் தடுப்பு மற்றும் ஆய்வு நிறுவனம்**

**மருந்து கண்டறியும் பழமையான ஆய்வகம் என்ன செய்கிறது!**


வலைத் தளத்தில்
வாழ்வியல்
சொல்லும்
களம்...
பாருங்கள்!
முற்றம்
MUTRAM TV
இணைய தொலைக்காட்சி

மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly April 2020

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி**
இணை ஆசிரியர்
பேராசிரியர் **அப்பாத்துரை**
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**ஜெ. ராஜாசிங்,**
**ஆரோக்கிய சார்லஸ்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,
செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
**சைதை மணிமாறன்**
**செபாஸ்டின்** திருச்சி
**ஜான் ஜெயராமன்**
**சாதிக்பாட்சா**
**மு.கலைச்செல்வன்**
**ஆ.சிரோன்மணி**
**முருகன் தேவேந்திரன்**
**ஜான்ஜெனோவா ஜெர்லின்** திருச்சி

நிர்வாகம்
**மணிகண்டன்**
வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**ஆபிரகாம் லிங்கன்**

அலுவலக முகவரி
எண் 124, சுப.வீ. தெரு, (என்.டி.ஆர். தெரு),
ரங்கராஜபுரம்,கோடம்பாக்கம், சென்னை- 24
பேச: 8056281973, 044 42154408.
மின்னஞ்சல்: mutram2010@gmail.com
இணைய தளம் : **www.mutram.in**

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
IFSC: IDIB000KI41
Rangarajapuram branch. Kodambakkam, chennai

# உள்ளே

பேராபத்திலிருந்து மனித குலத்தைக் காத்திட வேண்டும்!
– தலையங்கம்........................................................................................ 4

இந்தியாவில் கொரோனா தொற்றுக்குப் பிறகு
நடந்த நிகழ்ச்சிகள்................................................................................ 5

முற்றத்திற்கு முதல் வணக்கம் (வாசகர் குரல்)
– கரு. மாணிக்கம் கோவை.................................................................. 6

கஜினி முகம்மது படையெடுப்பு........................................................... 7

நீதிமன்றத்திற்கு நீதி சென்ன பெரியார்................................................. 11

திராவிட இயக்கத்தில் தளபதி............................................................... 15

தானாக ஓடும் கார் ...............................................................................17

முருகப்பா செட்டியார் (வரலாறு)........................................................ 20

கண்ணீர்த் துளிகளில் கடைசிப் பயணம்!.......................................... 22

சோழர்களின் நீர்வள மேலாண்மை – வீராணம் ஏரி......................... 24

கிங் நோய்த் தடுப்பு மற்றும் ஆய்வு நிறுவனம்................................. 25

தலை சிறந்த நீதியரசர்களில் ஒருவர்
பி.வி. ராஜமன்னார்............................................................................... 28

கொரோனா: எழுப்படும் கேள்விகள்................................................... 31

முற்றம் இதழில் வெளியிடுவதற்காக அனுப்பப்படும் படைப்புகளைத் திருத்துவதற்கும் வெளியிடாமல் இருப்பதற்கும் ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. *– ஆசிரியர்*

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் “mutram” என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.

வாழ்க தமிழ்!



# பேராபத்திலிருந்து மனித குலத்தைக் காத்திட வேண்டும்.

இன்று உலகமே அஞ்சி நடுங்குகின்ற அழிவுப் பேராயுதமாக பரவி வருகிற கொரோனா நுண்ணுயிரியை எப்படி எதிர் கொள்வது என்ற தவிப்பு, பொது மக்களையும் கடந்து நாட்டை ஆள்கிறவர்வர்களை ஆட்டிப்படைத்து வருகிறது. உலக சட்டாம்பிள்ளை என்று சொல்லிக் கொள்கிற அமெரிக்க நாடு தலை கவிழ்ந்து நிற்கிறது.

கொரோனா நுண்ணுயிரி தாக்கப்பட்டவர்களுக்கு கொடுத்து குணமாக்கக்கூடிய சரியான மருந்தை உலகத்தில் எந்த நாடும் கண்டுபிடிக்கவில்லை என்கிறார்கள். ஆனால், அதைத் தடுக்கலாம் என்ற வகையில் பல மருந்துகள் முன்மொழியப்படுகின்றன.

இந்த முன்மொழிவுகளில் தமிழகத்தின் சித்த மருத்துவத்திற்கு என்று ஒரு பெரும் சிறப்பு உண்டு. சித்த மருத்துவத்துறையினர் பல மருந்துகளைக் கூறுகின்றனர். அதில் எது சரியாக இருக்கும் என்பது அங்கீகரிக்கப்பட்டவர்கள் அங்கீகரித்து அனுமதித்தால் அது மக்களுக்குப் பேருதவியாக இருக்கும்.

இக்கட்டான இச்சூழலில் டெல்லிக்குச் சென்று வந்த இசுலாமியர்களால்தான் தமிழகத்தில் நோய்ப் பரவல் ஏற்பட்டிருக்கிறது என்ற மோசமான செய்தியை மனுவாதிகள் பரப்பத் தொடங்கியிருக்கிறார்கள். இந்த நோய் தோன்றியது சீனாவில், இசுலாமியர்கள் கூடியது டெல்லியில். எப்படி இவர்கள் மூலமாக பரவுகிறது. அதற்குக் காரணம் யார்? அயல்நாடுகளில் இருந்து வந்தவர்களை தடுத்திடவும், அவர்களைத் திருப்பி அனுப்பிடவும், அல்லது வந்தவர்களை சோதனைக்கு உட்படுத்தவும் அதிகாரம் பெற்ற நடுவணரசு, அவர்களை தலைநகரில் நுழைய விட்டுவிட்டு ஏன் இந்தியக் குடிமக்களை குறை கூறுகிறது என்று தெரியவில்லை. இம்மாநாடு மட்டுமல்லாது எல்லா சமயத்தினரும் பல கூட்டங்களை நடத்தியிருக்கின்றனர். அந்நிகழ்வுகளுக்கு எல்லாம் வெளிநாட்டினர் வந்து சென்றிருக்கிறார்கள். குறிப்பாக சக்கி வாசுதேவ் போன்றவர்களின் நிகழ்வுகளுக்கு வெளிநாட்டினர் பலர் வந்து சென்றிருக்கின்றனர். அதையெல்லாம் விடுத்து, இசுலாமியர்கள்தான் என்று பசனை பாடுவது கண்டிக்கப்பட வேண்டிய ஒன்று.

சாதி, மதம், இனம், மொழி, நிறம் கடந்து அனைவரையும் பாதிக்கக்கூடிய, அனைவருக்கும் இறப்பை ஏற்படுத்தக்கூடிய ஒரு நோய் வந்திருக்கிறதென்றால் அதை எப்படி தடுப்பது? அழிப்பது? என்பது பற்றித்தான் அமைச்சர்களும், அதிகாரிகளும், சமூக செயற்பாட்டாளர்களும் சிந்திக்க வேண்டும். அது தொடர்பாக மக்களுக்கு அறிவுரை வழங்க வேண்டுமே தவிர, வெறுப்புப் பேச்சுகளைப் பேசக்கூடாது.

மனிதர்களைத் தவிர பிற உயிரினங்கள் தங்களது அன்றாட வாழ்வை மகிழ்வுடன் வாழ்ந்து வருகின்றன. பிரிவினைவாதம் பேசிக்கொண்டிருக்கும் மனித இனம்தான் செத்துக் கொண்டிருக்கிறது. மனிதர்கள் எல்லாம் ஒரே தரமுடையவர்கள், தன்மையுடையவர்கள் என்ற உண்மை, மனிதர்களை விட கொரோனா நுண்ணுயிரிக்கு தெள்ளத் தெளிவாகத் தெரிந்திருக்கிறது.

அழிவு ஆற்றலான கொரோனாவிடம் இருந்து நாம் பாடம் கற்க வேண்டும். மனித இனம் ஒரே தன்மையுடையதுதான் என்று. வேற்றுமைகளைக் களைந்து, இந்நோய்ப் பரவலை தடுத்திடும் வண்ணம் நாம் ஒவ்வொருவரும் மனித விலகளைக் கட்டாயம் கடைபிடிக்க வேண்டும். அந்த தனி மனித விலகலை, மனதளவில் மக்கள் அனைவரும் ஒன்றாக இருந்து செயல்படுத்தி இந்த பேராபத்திலிருந்து மனித குலத்தைக் காத்திட வேண்டும்.

# இந்தியாவில் கொரானாதொற்றுக்கு பிறகு நடந்த நிகழ்ச்சிகள் இதோ

1. Surajkund International Craftsmela.
2. Kala Ghoda Arts Festival.
3. Sula Fest.
4. MathoNagrang Festival
5. AdoorGajamela
6. Udaipur World Music Festival
7. Alwar Festival
8. Jaisalmer Desert Festival
9. ThaipooyaMahotsavam
10. Mahindra Blues Festival
11. World Sufi Festival
12. Shekhawati Heritage Festival
13. Elephanta Festival
14. PariyanampettaPooramKattakulam
15. India Art Festival
16. Taj Mahotsav
17. Konark Festival
18. Natyanjali Dance Festival
19. MahaShivratri
20. Goa Carnival
21. Losar Festival
22. Khajuraho Dance Festival
23. Nagaur Fair
24. World Sacred Spirit Festival
25. Deccan Festival
26. Hampi Festival
27. Def Expo 2020 at Lucknow.
28. NamasteTrump
29 . Yogi pooja held after the lockdown.

சமீபத்தில் அதிகமானவெளிநாட்டினர் கலந்து கொண்ட நிகழ்ச்சி ஈஷாவுடையதுதான். தமிழ்நாட்டில் முதலில் முடக்கப்பட்ட மாவட்டமும் ஈரோடுதான். ஆனால் ஈஷாவை யாரும் குற்றம் சாட்டவில்லை.

அதேபோல் ட்ரம்ப் வந்த போது குஜராத்ஸ் டேடியத்தில் 70 ஆயிரம்பேர்ஒன்றாக கூடினார்கள். இன்றைக்கு குஜராத்திலும் 70 பேர்பாதிக்கப்பட்டு 5 பேர்இறந்துள்ளனர். ஆனால் யாரும் அந்த நிகழ்வை குற்றம் சாட்டவில்லை.

டெல்லியில்ஒருஇஸ்லாமியமாநாடு. அதில்கலந்துகொண்டவர்கள் மீதுமட்டும் அனைவரின் ஆள் காட்டி விரல்களும் நீள்கின்றன. இத்தனைக்கும் மாநாட்டிற்கு அரசு தடை விதிக்க வில்லை. மாநாடு நடந்த நேரத்தில் அரசுக்குமே கொரோனா குறித்த விழிப்புணர்வு இல்லை.

ஆனால் நியூஸ்சேனலை திறந்து பார்த்தால் அரைமணிக்கு ஒருமுறை இஸ்லாமிய மாநாடு, இஸ்லாமிய மாநாடு என்று திரும்ப திரும்ப சொல்லப்பட்டு வன்மம் தூண்டப்படுகிறது. நியூஸ் பாக்ஸின் கமெண்ட்களில் முஸ்லீம்களிடம் தள்ளியே இருங்கள் என்று சங்பரிவார்களால் தொடர்ந்து சொல்லப்படுகிறது.

நினைத்ததை நியூஸாக்குகிறீர்கள்... வாழ்த்துகள் மோடியாக்களே... ஸாரி, மீடியாக்களே....






# முற்றத்திற்கு முதல் வணக்கம்

1. தமிழ் மண்ணின் அரிசி வகைகளை அறியா இன்றைய சமூகத்திற்கு தரம் பிரித்து, அதன் மருத்தவ பயன்பாடுகளை அறியச் செய்த முற்றம் காலத்தின் அரிச்சுவடி

2. மருத்துவ சமுதாயத்தினர் ஆரிய வந்தேறிகளுக்குப் முன்பு வாழ்ந்த வாழ்க்கை சிறப்புகளையும் எப்படித் தனிமைப்படுத்தப்பட்டார்கள் என்பதையும் கவிதை நடையோடு கனத்த இதயத்தோடு வெளிப்படுத்திய வாணியம்பாடி தோழர் தியாகராசனுக்கு கரம் கோர்த்து இச்சமூகத்தின் வாழ்க்கை மலர அரசியல் வரலாற்றைக் கற்பிக்கும் பணி தொடரட்டும் முற்றத்தால் முடிவுகள் திருத்தப்படட்டும்.

3. சிறை வாழ்க்கைக்குப் பயந்து வெளியே வர ஆங்கிலேயரிடம் பணிந்து அழுது புலம்பி மன்னிப்புக் கடிதம் எழுதிய சவார்கர் எங்கே? சிறை வாழ்க்கை கண்டு நாங்கள் அச்சப்படமாட்டோம். எங்களை தூக்கில் போட வேண்டாம். மாறாக துப்பாக்கித் தோட்டாக்களால் சுடுங்கள் என நெஞ்சுரத்தோடு நமது தேசத்திற்காக முழங்கிய மாவீரன் பகத்சிங் எங்கே. சவார்கரின் சதிராட்டங்களைத் தோலுரித்துக் காட்டிய முற்றம் தேசத்தின் மாற்றம் என்பதில் ஐயமில்லை.

4. உன்மேல் கோபம் கொண்டு ஒருவன் ஒரு கன்னத்தில் அறைந்தால் நி கோபம் கொள்ளாமல் மறு கன்னத்தைக் காட்டு, இறைமகன் இயேசு போதித்த போதனையைக் கடைபிடித்து கேரளாவின் தேவாலயத்தில் தன்னைத் தாக்கியவரின் கால்களை கழுவி முத்தமிட்ட பாதிரியார் செயல் கிறித்தவர் இப்படித்தான் இருக்க வேண்டும் என உணர்த்தியும் தான் செய்த தவறை உணர்ந்து புது மனிதனாக வாழ சபதம் எடுத்து மனம் திரும்ப வைத்த சம்பவம் அனைவருக்கு இது ஒரு எடுத்துக்காட்டாகப் பார்க்கிறேன். எல்லாம் இயேசுவினாலே உண்டாயிற்று.

**தமிழா விரைவில் விழித்துக் கொள்!**
**பிழைத்துக் கொள்! என்று**
**உணர்த்திய முற்றம்**
**தமிழ் தமிழர் மிதுள்ள தமிழ்ப் பற்றுதலை '**
**மனதாரப் போற்றுகிறேன்.**
**முற்றம், தமிழ் சமூகத்தின் முன்னேற்றம்...**

தமிழர்களின் இன்றைய நிலை, வடநாட்டவனின் வளர்ச்சி விகிதத்தில் எப்படி அவனடைய பொருளாதார நிலையை வளமாக்கிக் கொண்டுள்ளான். எதிர்வரும் காலங்களில் தமிழரின் வாழ்வியல், பொருளாதார நிலை எப்படி இருக்கும் என்பதை படம் பிடித்துக் காட்டி, தமிழா விரைவில் விழித்துக் கொள்! பிழைத்துக் கொள்! என்று உணர்த்திய முற்றம் தமிழ் தமிழர் மீதுள்ள தமிழ்ப் பற்றுதலை மனதாரப் போற்றுகிறேன்.

**முற்றம், தமிழ் சமூகத்தின் முன்னேற்றம்...**

வாசகரின் குரலாய்... கரு. மாணிக்கம், கோவை.

# கஜினி முகம்மது படையெடுப்பு

கஜினி முகமதுவை சோமநாதபுரம் கோயிலைக் கொள்ளையடிக்க அழைத்து வந்தது யார்?

இந்தப்பெயர் இந்திய அரசியலில் இன்று வரை ஒருவகையான அருவருப்பு அரசியலை அரங்கேற்றப் பயன்படுத்தப்படுகிறது. யார் இவர்? என்னசெய்தார்?

மன்னர்கள் என்றாலே மக்களைஅடக்கிய வர்கள் என்ற உண்மையை மறந்து விட லாகாது. அதில் கஜினி மட்டும் ஏன் கொடூர மனிதராக சித்தரிக்கப்படுகிறார் என்ற அரசியல் புரிதலுக்காகவே இந்தப் பதிவு.

அந்தக்கால அரசர்கள் எந்தப்பகுதியின் மீது படையெடுத்தால் பெருத்த செல்வத்தை அள்ளிக் கொண்டுவரலாம் என்றுகணக்குப் போடுவதில் மட்டுமே குறியாய்.. இருப்பார்கள். படையெடுத்து அகப்பட்டதை சுருட்டிக் கொண்டு போவது ஒருவகை. கைப்ப ற்றிய பகுதியை தொடர்ந்து தன்னுடைய ஆட்சியின் கீழ்வைத்துக் கொண்டு மேலும்மேலும் கொள்ளையடிப்பது இன்னொரு வகை.

இருவகையினரின் நோக்கம்ஒரேவகையானது தான்என்றாலும், அகப்பட்டதை சுருட்டிக் கொண்டு ஓடுபவர்கள் தங்கள் வரலாறை எழுதி வைப்பதில்லை. தொடர்ந்து ஆட்சி செய்பவர்கள் தங்களின் வீர, தீர பராக்கிர மங்களை எவ்வளவு கேவலாமானவனாய் இருந்தாலும், சிறப்பாக எழுதி விடுவார்கள். அவனைப் புகழந்து பாடி பொரி, அவல் வாங்கித் திண்ணும் புலவர் புடலங்காய்களும் புறப்பட்டுவிடுவார்கள். அது பிறகு வரலாறு ஆகி விடுகிறது.

இத்தகைய இருவகையினரில் முதல் வகையினர் கொள்ளைக்காரர்கள் என்றும், இரண்டாவது வகையினர்பொய், புரட்டுமூலம்யோக்கியவான்கள் ஆகிவிடுவார்கள்.

இதைதான் இன்று வரலாறு என்று சொல்லிக் கொடுக்கிறார்கள். இங்கேயே இருந்து கஜினி தன்வரலாறை எழுதியிருந்தால், அது எப்படி



இருந்திருக்கும்.? அந்த வாய்ப்பு கஜினிக்கு கிடைக்காமல் போயிருக்கலாம், இல்லையேல் அதைப்பற்றி அவன் கவலைப்படாமல் போயிருக்கலாம்.

ஆனால் 17 முறைபடையெடுத்து 18 வதுமுறை கொள்ளையடித்து சென்றது எப்படி என்பதைத்தான் யோசிக்க வேண்டும்.

பெயர்முகமதுதான். கஜினி என்ற பகுதியை ஆண்டதால் கஜினி முகம்மது. இந்தப் பதிவில் சொல்லப் போகும் கருத்துகள் எனது கருத்தல்ல. யார் இதைச் சொன்னார்கள் என்று இறுதியாகச் சொல்கிறேன். அப்பொழுது மிகவும் வியப்பில் ஆழ்ந்துவிடுவீர்கள்.

"இன்றைய குஜராத் அந்தக் காலத்தில் ஆறு அரசர்களால் ஆளப்பட்டபகுதி. இங்குள்ள சோமநாதர் ஆலயம் மிகவும் பிரசித்தி பெற்றது. அதற்குக் காரணம் இந்தக்கோவிலின் லிங்கம் எந்தப் பிடிமானமும் இல்லாமல் அந்தரத்தில் தொங்கியது தான்.(எப்படிஎன்றுசொல்லாமல்பதிவுமுடியாது).

இதன் சிறப்புக்காரணமாக ஏராளமானபக்தர்களை அந்தக்கோவில் ஈர்த்ததில் ஆச்சரியம் இல்லை. எனவேசொல்ல முடியாத அளவுசெல்வம் கோவிலில் பக்தர்களால் குவிந்தது. குஜராத்தின் ஆறுஅரசர்களும் அந்தக்கோவிலின் போஷகர்களாக இருந்தனர். கோவிலின் அர்ச்சகர்கள் எத்தனைபேர் தெரியுமா? 11,000 பேர்.

எந்நேரமும் பரபரப்பாக இருந்த இந்தக் கோவிலில் கோடிக்கணக்கான சொத்தும் சேர்ந்து கொண்டி ருந்தது. அதை எப்படியேனும் கொள்ளையடிக்க வேண்டும் என்ற திட்ட இருந்தது.

கஜினி படையெடுத்து வந்த போதெல்லாம் குஜராத்தின் ஆறுஅரசர்களும் ஒன்று சேர்ந்து அவனைத்தடுத்து தோற்று ஓடச்செய்தனர். கி.பி 997 முதல் 1030 வரை 33 ஆண்டுகாலம் கஜினி தன் முயற்சியை கை விடவில்லை.

பரீட்சையில் தோற்கும் மாணவர்களுக்கு கஜினியே இன்றும் உந்து சக்தியாக இருக்கிறார்.

பதினெட்டாவது முறையாக 25,000 போர் வீரர்களுடன் சோமநாதபுரத்திலிருந்து எட்டு மைல் தூரம் முகாம் போட்டு

**காத்திருந்தான் கஜினி...**

கஜினி படையெடுத்து வந்ததை ஒற்றர்கள் மூலம் அறிந்த அரசர்கள் ஆறு பேரும் கோவிலின் தலைமை அர்ச்சகரிடம் போய் ஒருகோரிக்கை வைத்தனர். நம்மிடம் நாலரை லட்சம் வீரர்கள் உள்ளனர். கஜினியிடம் 25,000 பேர் மட்டுமே உள்ளனர். எளிதில் விரட்டிவிடலாம் என்று அனுமதி கேட்டனர். ஆனால் தலைமை அர்ச்சகர் அதற்கு உடன் படவில்லை.

அர்ச்சகர் என்றால்சும்மாவா? அரசனுக்கும் மேலே உள்ளவன். அர்ச்சகர் சொல்கிறார் கேளுங்கள். மிலேச்சன் படையெடுத்து வருவதை கணேசனும், காளியும் கனவில் வந்து தன்னிடம் சொன்னதாகவும், ஆனால் விசேஷமாய் ஹோமங் களும், அன்னதானம், சுவர்ணதானம், கன்னிகாதானம், ஆகியவை நடத்த வேண்டு மென கூறியதாகவும் சொல்லி, அரசர்களிடம் அதைச் செய்யுங்கள் என்று கூறியுள்ளார். ஏன் இப்படிச்செய்தார்?

இந்த அரசர்களுக்கு வரவர புராணங்களிலும், பிராமனங்களிலும், நம்பிக்கை குறைந்து வருவதால் தான் இப்படிப்பட்ட இடையூறுகள் தொடர்ந்து வருவதாக அர்ச்சகர் அரசர்களைக் கடிந்து கொண்டார். இனிமேலாவது பிராமணர்களின் அறிவுரை கேட்டுந டக்கும் படியும், யுத்தத்திற்கு ஆகும் செலவை பிராமணர்களுக்கு தானம்கொடுத்து விடுமாறு கட்டளையிட்டு, யாகசாலை நிறுவும் பணியில் ஈடுபட்டார்.

தனது ஒற்றர்கள் செய்திக்காக கஜினி காத்திருக்க, சோமநாதபுரத்திலோ 1008 யாக சாலைகள் நிறுவி, குழிகளில் நெருப்பு வளர்த்து, நெய், கோதுமை, சந்தனம் முதலானவை எரிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. பலநூறுபேர் மிலேச்சனிடம் இருந்து காப்பாற்ற வேண்டி கழுத்தளவு தண்ணீரில் நின்று தவம் செய்தார்கள். போர்வீரர்கள் நமக்கு என்ன என்று தூங்கிக் கொண்டிருந்தார்கள். கஜினிக்கு இந்தத் தகவல் போய் சேர்ந்தது.

யாக சாலைகளில் நெருப்பு எரிவதையும் , ஆயிரக் கணக்கான குழிகளில் புகை வருவதையும், நூற்றுக் கணக்கான தலைகள் தண்ணீரில் மிதந்து கொண்டி ருப்பதையும் பார்த்த கஜினியின் ஒற்றர்கள் பயந்து போனார்கள். அவர்களுக்கு இது ஏன் என்று புரியவில்லை. இதை கஜினியிடம் சொன்னார்கள்.

கஜினி தனது மதகுருவான மவுல்லியிடம் ஆலோசித்தான்.

மவுல்லி உடனே இது காபரினுடைய ஜின்னுகளின் (சாத்தான்கள்) வேலை என்று சொல்லி, நான்குரான் வாசித்தால் ஜின்னுகள் ஓடிவிடும் நீங்கள் படையை நகர்த்துங்கள் என்று கட்டளையிட்டார்.

கஜினியின் படைகள் வரும் சேதி தெரிந்ததும், 11000 புரோகிதர்களில் தலைமை அர்ச்சகர் உட்பட எண்ணூறு புரோகிதர்கள் தவிர மற்ற புரோகிதர் களும், மேலும் பலரும் அகப்பட்டதை அள்ளிக் கொண்டு ஓட்டம் பிடித்தனர்.

தலைமை அர்ச்சகர் தமது முத்துப் பல்லக்கை நன்றாகச் சிங்காரித்து சீடர் களையும், கோவில் தாசிகளையும் கஜினியை எதிர் கொண்டு வரவேற்று அழைத்து வர அனுப்பி வைத்தார்.

முத்துப் பல்லக்கை தனது ஒட்டகத்தின் மீது போட வைத்து, அதன் மீது ஏறி அமர்ந்து கஜினி கம்பீரமாக சோமநாதர் ஆலயத்திற்கு வந்து சேர்ந்தான். கோவிலின் உள்ளே கஜினி அமர சிங்காதனம் போடப் பட்டி ருந்தது. அந்த சிங்காதனத்தின் பெயர் வியாச பீடம் என்பதாகும். இந்த சிங்காதனத்தின் அன்றைய மதிப்பு 50 லட்சம் ரூபாய் ஆகும்.

கஜினி கோவிலில் போடப்பட்ட வியாசபீடத்தில் கம்பீரமாய்அமர, தலைமை அர்ச்சகர் கஜினியிடம் "இங்கு போலிராஜாக்கள் தங்களைப் பற்றி என்னென் னவோ சொன்னார்கள். ஆனால்நான் அவர்களை எல்லாம் அடக்கி வைத்தேன்" என்றுகூறி விட்டு, விஷ்ணு அல்லாதவன் அரசனாய் இருக்கமுடியாது. (நாவிஷ்ணுப் ருத்வீபதி) என்று வேதங்கள்சொல்கிறது.

எனவே விஷ்ணுவின் அவதாரமான தங்களின் நேர்மையான ஆட்சி எங்களை ரட்சிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்து விட்டு, எங்களுக்கு எந்த இடையூறும் செய்யவேண்டாம் என்று கூறி 3 கோடி ரூபாய் காணிக்கை தருவதாகக் கூறினார்.

யாரையும் ரட்சிக்க நான் வரவில்லை. சொத்துக்கள் எங்கே இருக்கிறது காட்டுங்கள் என்று கஜினி கூற, அர்ச்சகர் கொண்டு வந்து கொடுக்க, அதை கணக்கிட்டுப் பார்த்தால் கேள்வி பட்டதற்கும், கிடைத்த சொத்திற்கும் சம்பந்தமே இல்லை.

அர்ச்சகரே என்னிடம் இந்தவேலைஆகாது என்று கஜினி கூறி விட்டு, அர்ச்சகரின் இருகைகளிலும் எண்ணெய்யால் தோய்க்கப்பட்ட துணிகளைச் சுற்றி கொளுத்துமாறு கட்டளையிட்டான். மிரண்டு போன பார்ப்பான் சொத்து இருந்த எல்லா இடத்தையும் காட்டிக் கொடுக்கிறார்.

தலைமைகுருவின் தலைமையில் கோவில் இடிக்கப் படுகிறது. இடிக்கஇடிக்க செல்வங்கள் கொட்டிக் கொண்டே இருக்கிறது. கோவில் சாயத்துவங்க, அது வரை காந்தக் கற்களின் உதவியோடு அந்தரத்தில் நின்ற லிங்கமும் விழுந்து நொறுங்குகிறது.

நொறுங்கி விழுந்த லிங்கத்தின் உள்ளிருந்தும் நவரத்தினங்கள் கொட்ட வாரி வாரி அள்ளிப்போட்டுக் கொண்டு 800 புரோகிதர்கள், 5000 ஆண்கள், 6000 பெண்களை கைதிகளாகப் பிடித்துக்கொண்டு கஜினி சென்றான்.

இவ்வளவு சுவாரஸ்யமாக நடந்த சம்பவங்களை சொல்லியது யார்? என்ன ஆதாரம்? அப்புடின்னு கேப்பீங்க.

இந்த விபரங்கள்சுவையான கதைபோல தோன்ற லாம். அதீதமான கற்பனை என்றும் நினைக்கலாம்.

குஜராத்தி, உருதுமொழியிலுள்ள நூல்களில்தேடி எடுத்து நூலாக எழுதியவர் வேறுயாருமல்ல. வேதங் களை நோக்கி திரும்புமாறு இந்திய மக்களை அறைகூவி அழைத்த, ஆரிய சமாஜத்தை நிறுவிய சுவாமித யானந்த சரஸ்வதிதான்.

சுவாமி தயானந்த சரஸ்வதி குஜராத் மாநிலம் டன் காரா எனுமிடத்தில் பார்ப்பன குடும்பத்தில் பிறந்தவர். 1875 ல் ஆரிய சமாஜத்தை தோற்றுவித்தவர். 1883 அக்டோபர் 30 இறந்தார்.

அவர் இந்தியா முழுமையும் சுற்றி மதுராபுரியில் எழுதிவெளியிட்ட "சத்தியார்த்தப் பிரகாசம்" என்ற நூலில் 11 வது அத்தியாயத்தில் கஜினி படையெடுப்பு குறித்து விலாவாரியாக எழுதியுள்ளார். இதுவரை தெரிவித்தக் கருத்துகள் அவர் நூலின் விளக்கம் தான். இப்போது இதிலிருந்து எளிதாக புரிந்து கொள்வது இதுதான்.

1.ஆறு அரசர்களிடமும் இருந்துபார்ப்பனர்கள் கோவிலைக்கைப் பற்ற சதி செய்துள்ளனர்.

2. கஜினியை உள்ளே கொண்டு வந்து அரசர்களை விரட்டி விட்டு, கஜினிக்கு தொகை கொடுத்து ஒதுக்கி விடலாம் என்ற அவாள் பருப்பு அங்கு வேகவில்லை.

3. கோவிலை இஸ்லாமியரானகஜினி இடிக்கவில்லை. பார்ப்பனர்களே இடித்தது தெளி வாகிறது.

4.விஞ்ஞானம் சார்ந்த நுட்பத்தைப் பயன்படுத்தி, லிங்கம் அந்தரங்கத்தில் தொங்குவதாய் மக்களை ஏமாற்றியுள்ளனர்.

5. இந்துக்களை பார்ப்பனர்கள் ஏமாற்றிப்பிழைப்பு நடத்துகிறார்கள் என்றநிகழ்வு வெளிச்சத்திற்கு வருகிறது.

மேலும் நீங்கள் நிரப்பிக்கொள்ளலாம்.

சொன்னது சுவாமிதயானந்த சரஸ்வதி என்பதால் அரை டவுசர்கள் அங்குபோய் தாக்குதல் நடத்தலாம். இஸ்லாமியர்கள் மேல் பலிபோடுவது நியாயம் அல்ல.

கஜினி மற்றும் முகலாய மன்னர்கள் எல்லாம் ஆக்கிரமிப்பாளர்கள் என்றும் இந்துக்களை வதைப் பதே அவர்கள் வேலை என்றும் RSS பிரச்சாரம் செய்கிறது. ஏன் இந்தப் பிரச்சாரம்? உண்மை என்ன?

முகலாயச் சக்கரவர்த்திகளுக்கு முன்னால் பல முஸ்லிம் ஆட்சியாளர்கள் இங்கு ஆண்டுள்ளனர். கி.பி.1192 ல் முகமது கோரியும், கி.பி 1206ல் குதுப்உத் தீனும்,கி.பி.1296 ல்அலாவுதீன்கில்ஜியும்,கி.பி.1325 ல்முகமது பின்துக்ளக்கும், கி.பி.1414 முதல்கி.பி.1450 வரைடெல்லியில்சையதுகளின்ஆட்சியும்,கி.பி 1451ல் ஆப்கானிஸ்தான் வம்சத்தின்பஹ்லுல்லோடியும்,

அதைத் தொடர்ந்து லோடி வம்ச ஆட்சியை பானி பட்போரில் வீழ்த்தி கி.பி 1526 ல்பாபர் முகலாய சாம்ராஜ்யத்தை நிறுவினார்,

இவ்வளவு காலப் பகுதியில் ஆட்சி புரிந்த முஸ்லிம் மன்னர்கள் இஸ்லாத்தை பரப்புவதற்கான வேலையை கடுமையாகச் செய்திருந்தால் இங்கு இஸ்லாமி யர்கள் சிறுபான்மையினராக இருந்திருக்க மாட்டார்கள். முஸ்லிம்மன்னர்கள் அதிககாலம் ஆண்டாலும், பெரும்பாலானமக்கள் இந்துக்களாக இருந்தார்கள் என்பதை மறைக் கமுடியுமா?

அவர்களின் நோக்கம் மதம் பரப்புவதல்ல. சாதியை ஒழிப்பதல்ல அதைவைத்து அதிகாரம் செலுத்த வேண்டும் என்பதே ஆளும்வர்க்கஅரசியலே.

மன்னர்களுக்கு அதிகாரத்தை நிலை நிறுத்த அனைவரும் தேவைப்பட்டார்கள். RSS சும் இந்து மதத்தை வளர்ப்பதையா நோக்கமாகக் கொண்டுள்ளது. இஸ்லாமி யரைப் பகைவராகக் காட்டி பார்ப் பனியத்தின் செல்வாக்கை தக்க வைப்பதே நோக்கம் என்பதை அப்பாவி இந்துமக்கள் புரியவேண்டும்.

இருப்பினும் இஸ்லாமிய மன்னர்கள் இந்துக்களின் பால் எத்தகைய அணுகு முறைகொண்டிருந்தார்கள் என்பதற்கு பாபர்தன்மகன் ஹுமாயூனுக்கு 11.1.1529 ல் எழுதி வைத்த உயில் மூலம் அறிவோம்.

இந்துக்கள் குறித்த அணுகுமுறை எப்படி இருக்கவேண்டும் என பாபர் தனது மகன் ஹிமாயூனுக்கு 11 11 529 ல் எழுதி வைத்த உயில் இது தான்.

அருமைமகனே! பலவகையான மதங்களைப்பின் பற்றும்மக்கள் இங்குவாழ்ந்து வருகின்றனர். இத்தகைய நாட்டின் அரசாட்சியை மன்னாதி மன்னராம் அல்லா உன்னிடம் ஒப்படைத்ததற்கு நீ நன்றி சொல்ல வேண்டும். ஆகவே.

உன் குடிமக்களின் மத சம்பந்தமான மென்மையான உணர்வுகளுக்கு எப்போதும் மதிப்பளித்து வர வேண்டும்.

மற்ற சமூகத்தின் வழிபாட்டுத் தளங்களை ஒருபோதும் இடித்து சேதப்படுத்த லாகாது.

அடக்குமுறை எனும் வாளை விட இந்துக்களின் அன்பு மற்றும் நன்றிக் கடன் என்ற தூண் மூலம் இஸ்லாமைப்பரப்பு.

ஷியா மற்றும் சன்னிப் பிரிவினரிடையே நிலவும் உட்பூசலை அலட்சியம் செய்.

குடிமக்களிடம் காணப்படும் வேறுபாடுகளை பருவ காலங்களுக்கு இடையே யான வித்தியாசம் போல் கருதி ஒதுக்கி விடு.

இப்படிப்பட்ட அறிவுரைகளைக் கூறிய பாபரின் பேரன் அக்பர் இன்னும் ஒரு படி மேலே போய் மத வேறுபாடுகளற்ற ஒரு புதிய மார்க்கத்தையே "தீன் இலாஹி" என்ற பெயரில் முன் வைத்தார்.

இப்படிப்பட்ட முகலாய அரசர்கள்மீது அவதூறுப் பிரச்சாரத்தை RSS-BJP செய்வதன் நோக்கம் அவதூறு களின் பால்உண்மையா, பொய்யா என்ற முடிவுக்கு வருவதல்ல. மாறாக..

இப்போது வாழ்ந்து வரும் இஸ்லாமியர்கள் மீது பகையை வளர்த்து, அதை வைத்து அரசியல் ஆதாயம் தேடும் அருவருப்பான சிந்தனைத விர வேறொன்று மில்லை.

பார்ப்பனிய மும்மனுவும் உருவாக்கியகேடு கெட்ட கொள்கைகளுக்கு எதிராக இந்திய மண்ணில் ஏராள மான இந்து சமயசீர்திருத்தவாதிகள் உருவானார்கள்

சுவாமிதயானந்தசரஸ்வதி

சுவாமிவிவேகானந்தர்

இராஜாராம்மோகன்ராய்

தேவேந்திரநாத்தாகூர்

கேசப்சந்திரசென்

லாலாஹன்ஸ்ராஜ்

நாராயணகுரு

அய்யன்காளி

குருபிரசாத்

குருநானக்

குருசாயி

ஐயாவைகுண்டர்

ராமானுஜர்

இன்னும் இன்னுமாய் பட்டியல் நீளும்.

ஒரேகேள்விதான்

இத்தனை இந்துசமயசீர்திருத்தவாதிகள்


போராடினார்களேஎதற்கு?

பார்ப்பனியம்உருவாக்கியசீரழிவுகளுக்குஎதிராகத்தானே?

1925 ல்சித்பவன பார்ப்பனர்களால் நாக்பூரில் தொடங்கப் பட்ட ஆர்எஸ்எஸ் இந்து சமூகத்தில் செய்த சீர்திருத்தம் என்ன என்று சொல்லுங்கள் பார்ப்போம்.

கலவரம் செய்ததைத் தவிர வேறென்ன? மக்கள் ஒற்றுமை காப்போம் மதநல்லிணக்கம் பேணுவோம்.

●





# நீதிமன்றத்திற்கு நீதி சொன்ன பெரியார்

1956ஆம் ஆண்டு வாக்கில் இப்போதைய ஒருங் கிணைந்த திருச்சி மாவட்டத்தின் ஆட்சியராக இருந்த ஒரு பார்ப்பனரல்லாத தமிழர் திரு. ஆர்.எஸ். மலையப்பன் என்பவர் மிகச் சிறந்த நிருவாகி எனப் பெயர் பெற்றவர்.

இவர் ஆட்சித்தலைவராக இருந்தபோது பெரம் பலூர் அருகில் உள்ள நாராயண மங்கலம் என்ற ஊரில் நரிக்குறவ மக்களுக்கான வீடுகள் கட்டிக் கொடுத்து அவர்களின் வாழ்வாதாரங்களுக்கு உதவிகள் செய்தார். இதுபோன்ற பல மக்கள் நலப்பணிகளை மேற்கொண்டு மக்கள் ஆட்சியராக விளங்கிய அவர், அரசாங்கத்திற்காக ஒரு தனி நபரின் நிலத்தை எடுப்புச் செய்தது தொடர்பாக, அந்த நபரால் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. அந்த வழக்கில் நீதிபதிகள் இருவர் தனி நபருக்குச் சார்பாக ஆணை பிறப்பித்த தோடின்றி நில எடுப்புச் செய்த ஆட்சியரை வரம்பு மீறிக் கண்டித்ததோடு அவர் நாட்டில் எங்கும் உயர் பதவிகளில் இருக்க இலாயக்கற்றவர் என்றும் அதில் குறிப்பிட்டிருந்தனர்.

இந்த ஆணையை (24.10.1956) வழங்கிய இரு நீதிபதிகளும் ஐயங்கார் பார்ப்பனர்கள். வழக்கறிஞராக அட்வகேட் ஜெனரலாக இருந்தவர் திருவேடங்கடாச் சாரி என்ற ஐயங்கார். பார்ப்பனர். இந்தத் தீர்ப்பு வெளியானதும் இந்து பத்திரிகையில் அதுபற்றித் தலையங்கத்தில் பார்ப்பன நீதிபதிகளின் தீர்ப்பை வரவேற்றுப் பலவாக புகழ்ந்து எழுதியிருந்தது. இதைப்படித்த பெரியார் மனதில், பார்ப்பன ஆதிக்கத் தின் வெறியின் விளைவே இது என்ற எண்ணம் எழுந்தது. அவர் குருதியோடு கலந்து விட்டிருந்த இன உணர்வு பீறிட்டெழச் சீறியெழுந்தார்.

மாவட்ட ஆட்சியர் திரு.ஆர்.எஸ். மலையப்பன் யாரென்று தெரியாது. அவரை முன்பின் பார்த்தது கிடையாது. அதுபோலவே இந்தப் பார்ப்பன ஐயங்கார் நீதிபதிகளையும் அவர் பார்த்ததும், கேட்டதுமில்லை. இருப்பினும் இந்த நீதிமன்ற ஆணை, பார்ப்பன பார்ப்பனரல்லாதா இடையேயான ஒரு மானப் பிரச்சனை. ஆரிய திராவிடர்களிடையேயான உணர்வை அடிப்படையாகக் கொண்ட ஓர் உணர்ச்சிப் பிரச்சனை எனக்கருதினார் பெரியார். 4.11.1956 அன்று குறுகிய காலஇடைவெளியில் திருச்சியில் ஒரு கண்டனக் கூட்டம் ஏற்பாடு செய்தார். இக்கூட்டத்தில் சுமார் நாற்பதாயிரம் பேர் கலந்து கொண்டனர். மிகுந்த எழுச்சியோடு நடந்த இந்த கூட்டத்தில் சுமார் ஒன்றரை மணிநேரம் பேசிய பெரியார் எவரும் கூறத்துணியாத கருத்துக்களைக் கூறிச்சென்றார்.

உயர் நீதிமன்றத் தீர்ப்புகளைப் பற்றிப் பொது மக்கள் கருத்துத் தெரிவிப்பது கோர்ட்டை அவமானப் படுத்துவதாகும் என்ற பூச்சாண்டியை இனியாவது அம்பலப்படுத்த வேண்டும். உயர் நீதிமன்றத்துக்கு

நீதிபதிகளும் மனிதப்பிறவிகளானதால் ஆசாபாசங் களுக்கும் சமுதாய உணர்ச்சிகளுக்கும் தவறுகளுக்கும் கட்டுப்பட்டவர்கள். இவர்களை நியமிக்கின்ற இந்தியத் தலைவரையும் அவருக்கு அடுத்தபடியாக உள்ள இந்திய முதலமைச்சரையும் கண்டிக்கவும், கொடும் பாவி கட்டிக் கொளுத்தவும் இவர்கள் எல்லோருக்கும் மேம்பட்டதாகக் கருதப்படுகின்ற தேசியக்கொடி என்பதையுமே கிழித்துப்போட்டுத் தீ வைக்கவும் ஜனநாயகச் சமூகத்தில் உரிமை இருக்கும்போது, சாதாரண சர்க்கார் உத்தியோகஸ்தர்களில் ஒருவரான நீதிபதியின் தீர்ப்பைத் தவறு என்று கண்டிப்பதற்கு மக்களுக்கு உரிமை வேண்டாமா?“ என்ற அதிர்ச்சியான கேள்வி கேட்ட பெரியார், “தமிழர், தமிழர் கலாச்சாரம், தமிழர் உரிமை, தமிழர் உத்தியோகம் ஆகியன தொடர்பான வழக்குகளில் இனி ஆரிய நீதிபதிகள் விசாரணை செய்யக்கூடாது“ என்று முடிவு ஏற்பட வேண்டும் என்று கருத்துரைத்தார்.

இந்தப் பொதுக்கூட்டத்தில் நியாயமற்ற முறையில் தீர்ப்பு வழங்கிய இரண்டு பார்ப்பன நீதிபதிகளையும் உடனடியாகத் தமிழ்நாட்டை விட்டு வேறு மாநிலத் திற்கு மாறுதல் செய்ய வேண்டும் என்றும் தன் கடமையைச் சரிவரச் செய்யத் தவறிய அட்வகேட் ஜெனரல் பார்ப்பனர் மீது அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப் பட்டு அது பொது மக்கள் வாக்கெடுப்புக்கு விடப் பட்டது.

கூட்டத்திலிருந்த சுமார் 40,000 பேரும் ஒட்டு மொத்தமாகக் கைகளை உயர்த்தித் தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர். தந்தை பெரியாரின் இந்தப் பொதுக் கூட்டப் பேச்சு விவரம் 6.11.1956 அன்றைய விடுதலை இதழில், கோர்ட்டை அவமதிப்பதல்ல என்ற தலைப்பில் தலையங்கமாக வெளியானது...இது வெளியிடப்பட்டதுமே அரசாங்கம் இது நீதிமன்ற அவமதிப்பு என்று பேசிய குற்றத்திற்காக பெரியார் மீதும் வெளியீட்டாளர் என்ற முறையில் அன்னை மணியம்மையார் மீதும் வழக்குத் தொடர்ந்தது.

**“தமிழர், தமிழர் கலாச்சாரம், தமிழர் உரிமை, தமிழர் உத்தியோகம் ஆகியன தொடர்பான வழக்குகளில் இனி ஆரிய நீதிபதிகள் விசாரணை செய்யக்கூடாது”**

இவ்வழக்கில் 23.4.1957 அன்று சென்னை உயர் நீதிமன்றத்தில் நடந்த விசாரணையில் பெரியார் நேரடியாகக் கூண்டில் நின்று தானே படித்து அளிக்க முப்பது பக்க விளக்க அறிக்கையானது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவொரு ஆவணமாகும். அதனை அப்படியே இங்கு அளிப்பது இயலாததெனினும் அதில் கண்டுள்ள முக்கியமான சிலவற்றைக் கூறுவது, பெரியாரின் எண்ணத்தின் வலிமையைக் காட்டும். அது நீதி கெட்டது யாரால்? என்று பெயரில் புத்தகமாக வெளிவந்துள்ளது. அதனை அனைவரும் படித்து ணர்வது அவசியம்.

இந்தக் குற்றாச்சாட்டு வார்த்தைகளின் நேரடி யான பொருளுக்கு ஏற்ற மாதிரி நான் யாதொரு குற்றமும் செய்தவனல்ல. பொதுவாக, மனிதசு பாவத்தைப் பற்றியும் நீண்டகாலமாக அது பிரதி பலித்து வருவதைப் பற்றியுமே எடுத்துச்சொல்லி, அதற்குப் பரிகாரம் தேடவே முயற்சித்து இருக்கிறேன். இந்தத் தீர்ப்பின்மீது என் ஆராய்ச்சிக்கு எட்டிய கருத்து, பாதிக்கப்பட்டவர் பார்ப்பனரல்லாதாராய் இருப்பதாலும் தீர்ப்புக் கூறியவர்கள் பார்ப்பனர் களாயிருப்பதாலும் இம்மாதிரி ஏற்பட்டது என்பது எனது தாழ்மையான முடிவு.

மனுதர்ம சாஸ்திரத்தின் ஒரு பார்ப்பனரல்லாதவன் (சூத்திரன்) ஒரு நாட்டிலே (பார்ப்பனர்கள் வாழும் நாட்டிலே) நீதிபதியாகவோ, நிர்வாக அதிகாரியா கவோ, அமைச்சராகவோ, அரசனாகவோ உயர் பதவியாளனாகவோ இருக்கக்கூடாது என்பது தர்மமாகும். அப்படியிருக்க விடக்கூடாது என்பதும் பார்ப்பனர் தர்மமாகும். இந்த மனு தர்மந்தான் நீதிபதிகள் கையாளும் இந்து சட்டத்திற்கு மூலாதார மாகும். இதற்கு உதாரணங்கள் அதிகம். கனம் கோர்ட்டார் அவர்களுக்குக் காட்ட வேண்டியதில்லை என்றே கருதுகின்றேன்.

சென்னை அய்க்கோர்ட்டு சுமார் நூறு ஆண்டுகள் ஆகியும் சமீபத்தில் 1015 ஆண்டுகளில்தான் அதாவது, பார்ப்பனத் துவேஷம் என்று சொல்லக்கூடிய சாதிப்புரட்சியும் பார்ப்பனர்கள் நடத்தையை வெளிப்படையாகக் கண்டித்தல் என்ற தன்மையும் சர்வ சாதாரணமாக நாட்டில் ஏற்பட்ட பிறகுதான் பார்ப் பனரல்லாதவர்களில் ஒருவர், இருவர் உயர் நீதிமன்ற நீதிபதிகளாகத் தோன்ற முடிந்தது.

ஆகையினால்தான் பார்ப்பனர்கள் எந்தப் பதவியில் இருந்தாலும், அவர்களுடைய நடத்தையில் சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம், பார்ப்பனரல்லா தவர்களை ஒழித்துக்கட்டுவதில் தலையெடுக்க விடாமல் செய்வதில், சரியாகவோ, தப்பாகவோ காலாகாலம் பாராமல் தங்கள் முயற்சிகளைச் செய்து கொண்டுதான் வருவார்கள். இவர்கள் இப்படி நீண்ட நாட்களாகச் செய்து வருகிறார்கள் என்பதற்கு

ஏராளமான உதாரணங்கள் எடுத்துக்காட்ட முடியும். பின்னாலே தருகிறேன்.

பிரஸ்தாப வழக்கில் சம்பந்தப்பட்ட கலெக்ட ருடைய (பார்ப்பனரல்லாதார்) உத்தரவு சரியான தென்று வாதாட நான் வரவில்லை. அவரைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியவும் தெரியாது. எங்களுக்குள் அறிமுகமாகும் அளவுக்குக்கூட சந்திப்பு ஏற்பட்டது மில்லை. இதை உறுதியாகச் சொல்கிறேன். அது போலவே பார்ப்பனர்களான கனம் இரு ஜட்ஜ் களையும் நான் சந்தித்ததே கிடையாது. எனக்கு அறிமுகமும் இல்லை. என்னால் அவர்களை அடை யாளம் காட்டவும் முடியாது. வெளியில் சொல் வார்கள் கலெக்டர் ரொம்பவும் நேர்மையும், நாணயமும் உள்ளவர் என்று சம்பந்தப்பட்ட கனம் ஜட்ஜ்களை தமிழர்களின் நல்வாழ்வு விஷயத்தில் விஷமுள்ள பார்ப்பனர்கள் என்றும் பேசிக்கொள்வார்கள்.

நான் பேசியதாகச் சொல்லப்படும் பேச்சில் இந்த இரு தரப்பினர்களைப் பற்றியும் தனிப்பட்ட முறையில் இந்தக் குணங்களைச் சம்பந்தப்படுத்தியோ மனதில் வைத்தோ நான் ஒரு பேச்சும் பேச முற்படவில்லை. தனிப்பட்ட முறையில் இவர்களைப் பற்றி எனக்கு எந்தவிதமான விருப்போ வெறுப்போ கிடையாது.

ஆனால் தீர்ப்பைப் பற்றியப் பார்ப்பனப் பத்திரி கையில் செய்தியைப் படித்தும் அதைப்பற்றிப் பார்ப் பனப் பத்திரிகையான இந்து பத்திரிகை எழுதிய தலையங்கத்தைப் படித்ததும், தமிழ் மக்கள் இதைக் கேட்டுப் பதறின பதட்டத்தையும், காட்டின பரிதாபத் தையும் பார்த்தபிறகு எனக்குத் திடீரென்று ஒரு எண்ணம் தோன்றியது. ஆஹா, இந்தக் கலெக்டர் ஒரு பார்ப்பனராய் இருந்தால் கனம் பார்ப்பன ஜட்ஜ்கள் இப்படி எழுதியிருப்பார்களா? அல்லது பார்ப்பனரால் லாதவர்களாய் இருந்திருந்தால் இவ்வாறு கலெக்டரை அனாவசியமாகத் தாக்கி எழுதியிருப்பார்களா? என்ற எண்ணமும் தோன்றியது.

கலெக்டருடைய முப்பது ஆண்டு நிர்வாக நடத்தைகளைப் பற்றி எந்தவதிமான குற்றமோ குறையோ கூறப்படவில்லை. இப்படிப்பட்டவர் ஒரு காரியத்தில் தவறுதலான உத்தரவு, அதுவும் தான் தவறு செய்கிறோம் என்கிற எண்ணமே இல்லாமல் அரசாங்க நோக்கத்தைச் சரியாகவோ தப்பாகவோ புரிந்து அதன்பேரில் போடப்பட்ட ஒரு உத்தரவுக்காக இவ்வளவு பெரிய கொடுமை இழைக்கப்பட்டு விட்டது தான் என் உள்ளத்தைப் பெரிதும் வருத்தி விட்டது. பார்ப்பான் நீதிபதியாய் ஆட்சியாளராய் இருக்கும் நாடு கடும்புலி வாழும் காடேயாகும். ஆதலால் நாங்கள் புலி வேட்டையாடுகிறோம். புலி மேலே பாய்ந்ததில் ஒருவர் இருவர் அடிபட வேண்டியதுதான் எல்லா பார்ப்பனர்களும் அப்படித்தானா? என்று கனம் ஜட்ஜ்கள் சிந்தித்து நான் சொல்வது தவறு என்று கருதலாம்.

**பிறவியில் மாறுதல் இருந்தாலொழிய புலி புல்லைத் தின்னாது ஆடு மனிதர்களைத் தின்னாது. அதுபோல வாக்கும் நம் பார்ப்பனர்களின் தன்மை. என்னுடைய பிரச்சினையெல்லாம் ஜட்ஜ்களைக் குறை சொல்லு வதல்ல, பார்ப்பனர்கள் நமக்கு ஜட்ஜ்களாக இருக்க கூடாது என்பதுதான்.**

இதுவரையில் எந்த இந்தியரும் வகித்திராத உயர் பதவி வகித்தவர்கள் என்ற தன்மையில் முதல் வரிசையில் முதல்வராக இருக்கும் ராஜகோபாலாச் சாரியார் அவர்கள் சொல்லுகிறார்கள்.

நான் வேத சாஸ்திர புராண இதிகாச உபநிஷத் தர்மங்களில் முழு நம்பிக்கை உடையவன். ஜாதிப்பிரி வின் அதாவது, வர்ணாஸ்ரம தர்மத்தில் மிக்க நம்பிக்கையும் கவலையும் உடையவன். அவைகளைப் பரப்பவும் நிலைநிறுத்தவுமே நான் பாடுபடுகிறேன். இனியும் அதற்காகவே பாடுபடுவேன் என்று சொல்லு கிறார், எழுதுகிறார். அதற்கு வேண்டிய காரியங்களைச் செய்கிறார் என்றால் இனி யாரை மனதில் வைத்துக் கொண்டு எல்லா பார்ப்பனர்களும் இப்படித்தான் இருப்பார்களா? என்று நினைப்பது வாயில் நாக்கில் குற்றம் இருந்தாலொழிய வேம்பு இனிக்காது தேன் கசக்காது.

பிறவியில் மாறுதல் இருந்தாலொழிய புலி புல்லைத் தின்னாது ஆடு மனிதர்களைத் தின்னாது. அதுபோல வாக்கும் நம் பார்ப்பனர்களின் தன்மை. என்னுடைய பிரச்சினையெல்லாம் ஜட்ஜ்களைக் குறை சொல்லு வதல்ல, பார்ப்பனர்கள் நமக்கு ஜட்ஜ்களாக இருக்க கூடாது என்பதுதான். வெள்ளைக்காரர்களைக் குறிப் பிட்டு இந்த முறையில் தானே நமது சுதந்திரப் போராட்டத்தில் போராடியிருக்கின்றோம். வெள் ளைக்காரன் எவ்வளவு உயர்ந்த அதிகாரியாக இருந்தாலும் அவன் வெள்ளையன் என்கிற முறையில் இதைச் செய்தான், அதைச்செய்தான் என்று ஏராள மான விஷயங்களை எடுத்துக்கட்டிக் கிளர்ச்சி செய்திருக்கிறோம். அதே முறையில் கிளர்ச்சி செய்ய வேண்டிய அவசியத்தில் தான் இது நேர்ந்தது என்பதைப் பணிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஸ்டேட்மென்டில் நான் எடுத்துக்காட்டி இருக்கிற விஷயங்கள் எல்லாம் எவ்வித குரோத, துவேஷ உணர்ச்சியில்லாமல், என் இன மக்களுடைய உண்மையானதும் அவசியமானதுமான நலன் கருதி, ஒரு யோக்கியமான பொதுநலத்தொண்டன் என்கிற தன்மையில் சமூகம் கோர்ட்டார் அவர்களும் கனம் நீதிபதிகளுடைய சித்தம் எதுவோ அதுவே என்

பாக்கியம் என்பதாகக் கருதி எதையும் ஏற்கத் தயாராக இருக்கிறேன்.

இவ்விளக்கத்தைப் படித்து முடித்ததும் கண்ணியத் திற்குப் பெயர் போன தோழர் பெரியார் நீதிமன்ற நேரத்தை வீணடித்து விட்டதற்கு மன்னிக்க வேண்டு கிறேன் என்று கூறி அமர்ந்தார். அட்வகேட் ஜெனரல் திருவேங்கடாச்சாரியாரின் வாதங்களுக்குப் பிறகு தலைமை நீதியரசர் தனது தீர்ப்பில் கூறியிருக்கும் சில முக்கிய பகுதிகள்.

இரண்டு அய்யங்கார் நீதிபதிகள் ஒரு தமிழரான கலெக்டரைப்பற்றி எல்லை மீறிய கடுஞ்சொற்கள் அடங்கிய தீர்ப்பை வெளியிட்டிருக்கின்றனர் என்றும், இது ஆரியர் தமிழர் உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட பிரச்சினையல்ல வென்றும், சுமார் ஒன்றரை மணிநேரம் விளக்கிக்காட்டிப் பேசிய பெரியார், இந்தியாவிலேயே ஏன் உலகத்திலேயே எந்தத் தலைவ ரும் சொல்லத் துணியாத ஒரு உண்மையைச் சொல்லி யிருக்கிறார்.

தமிழர், தமிழர் கலாச்சாரம், தமிழர் உரிமை, தமிழர் உத்தியோகஸ்தர் ஆகியவர்களின் வழக்குகளைப் பற்றி இனி ஆரிய நீதிபதிகள் விசாரணை செய்தல் கூடாது என்று முடிவு ஏற்பட வேண்டுமென்று அழுத்தந்த திருத்தமாகக் கூறினார்.

எந்தக் கோர்ட்டின் தீர்ப்பும், அதுவும் குறிப்பாக இந்தக் கோர்ட்டின் தீர்ப்பு தவறானது மட்டுமல்ல எதிரி நீதிபதிகளின் வகுப்புக்கு மாறுபட்ட வகுப்பைச் சேர்ந்தவர் என்ற காரணத்தால் இவ்வாறு நீதி வழங்கப்பட்டது என்று சொல்வதும் சந்தேகத்திற்கிடமின்றி கோர்ட்டை அவமதிப்பதாகும் என்பது நன்கு தெரிகிறது.

கோர்ட் அவமதிப்பு நடவடிக்கைகள் எப்போதும் பழிவாங்கும் மனப்பான்மையுடன் கூடியவை அல்ல. அவை பெரும்பாலும் கோர்ட்டின் கவுரவத்தைக் காக்கும் பொருட்டே உள்ளன. இதைக்கருத்தில் கொண்டும் முதலாவது எதிர் மனுதாரரின் (பெரியார்) முதிர்ந்த வயதைக் கொண்டும் நூறு ரூபாய் அபராதத்தை நாங்கள் விதித்தால், நீதியின் முடிவுக்கு அது போதுமானது என்பது எங்கள் கருத்து".

பெரியாருக்கு அபராதம் விதிக்கப்படுகிறது. மணியம்மையார் எச்சரித்து விடப்படுகிறார். வழக்கு இத்தோடு முடிகிறது. ஆனால் பெரியாரின் மனதில் எழுந்த அந்த நியாய உணர்வு, எழுந்த ஆத்திரம், அதற்காக அவர் நீதிமன்றத்தில் வெளிப்படையாக வெளியிட்ட பிரகடனம், பெற்ற தண்டனை யாவும் எண்ணும் போதெல்லாம் மெய்சிலிர்க்கச் செய்யுமே. இன்றும் நீதிமன்றங்களின் இதுபோன்ற நியாயமற்ற நிகழ்வுகள் தொடர்ந்து கொண்டுதான் உள்ளன. ஆனால் பெரியார் போன்ற போராளி...?

## பரிணாமக் கொள்கையைத் தோற்கடித்துப் படைப்புக் கொள்கையை நிலைநாட்டும் உலகின் ஒரே மொழி தமிழ்!



புனித தோமா இயேசு பெருமானின் உயிர்தெழு தலை ஏற்றுக் கொள்ளாமல் முதலில் சந்தேகித்தார், இயேசு பெருமான் அவர் முன் தோன்றி, சோதித்துப் பார்க்கச் சொன்ன பொழுது, புனித தோமா இயேசு பெருமானைக் கடவுள் என்று உலகில் முதன் முதலில் அறிவித்தார் என்பதை அறிகிறோம் (யோவான் 20:28)

சந்தேகித்துக் தெளிவடையும், பகுத்தறிவு முறையில் இயேசு பெருமானைக் கடவுள் என்று அறிந்த புனித தோமா, உலகின் முதல் மொழியாகிய தமிழில் அதைப் பதிவு செய்துள்ளார்.

இதனால் கடவுளின் படைப்புக் கொள்கையால், பரிணாமக் கொள்கையைத் தோற்கடிக்கும் ஆற்றல், தமிழ் மொழிக்கு மட்டுமே இருக்கிறது. உலகிலுள்ள மற்ற மொழிகளுக்கெல்லாம் இந்த ஆற்றல் இல்லை என்பது ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கு விளங்கும்.

தமிழகத்தில் தோன்றிய அத்வைதம், விசிஷ்டாத் வைதம், துவைதம் ஆகிய மூன்றிலுமுள்ள குறைகளை நீக்கி முழுமைப்படுத்தும் சைவசித்தாந்தம் தமிழ் மொழி யில் மட்டுமே இருக்கிறது.

சைவ சித்தாந்தத்திற்கு அடிப்படை நூலாக விளங்கும் சிவஞானபோதம் புனித தோமா வழியில் இயசே பெருமானே இப்பேரண்டத்தை ஆளும் கடவுள் என்பதை பகுத்தறிவு வழியில் விளக்கிக் கொண்டிருக்கிறது.

**புலவர். தெய்வநாயகம்.**

திராவிட இயக்கத்தில்தளபதி என்ற வார்த்தை மிகவும் புகழ் பெற்றது. பெரியார் வாழ்ந்த காலத்தில் அவரின் தளபதியாக வெவ்வேறு காலகட்டங்களில் மூன்று பேரைச் சொல்வார்கள்.

முதலாவதாக பட்டுக்கோட்டை அழகிரி, அடுத்து அண்ணா. மூன்றாவதாக கி. வீரமணி.

பட்டுக்கோட்டை அழகிரி உடல்நலம் குன்றி இருந்த கால கட்டங்களில் அறிஞர் அண்ணா செயற்கரிய செயல் ஒன்றைச் செய்தார், தன்னையாரேனும் கூட்டங்களுக்கு அழைக்க வேண்டுமேயானால் பட்டுக்கோட்டை அழகிரி பெயருக்கு நூறு ரூபாய் மணியாடர் அனுப்பி விட்டு அந்த ரசீதை தன்னிடம் கொண்டு வந்து காட்டினால் தான் கூட்டத்திற்கு தேதி கொடுப்பதாகச் சொன்னார், இப்படி பிறன் துயர் தன் துயர் போல எண்ணி துடைக்கின்ற பாங்குதான் அறிஞர் அண்ணாவை தமிழகத்தின் மிகப்பெரிய சிந்தனையாளராகவும் செயல் வீரராகவும் மாற்றியது.

தன்னுடைய செயல்கள் ஒவ்வொன்றும் தமிழ்ச் சமூகத்திற்கு எந்தவகையில் பயனளிக்கிறது என்று எண்ணியபடியே தன்பயணத்தைத்தொடர்ந்தவர் அறிஞர் அண்ணா.

அமெரிக்காவில் சிகிச்சை முடிந்து நுங்கம்பாக்கம் வீட்டில் தங்கி இருந்த காலகட்டத்தில் பேராசிரியர்க. அன்பழகன் அவர்கள் அண்ணாவை பார்க்கச் செல்கிறார், அண்ணாவின் படுக்கையைச் சுற்றி பத்துப் பன்னிரெண்டு புத்தகங்கள் உள்ளன, அவற்றில் ஒன்றை எடுத்து இதுதானே உங்களுக்கு மிகவும் பிடித்த புத்தகம்? என்று பேராசிரியர் கேட்கிறார், எனக்குப் பிடித்து என்னவாகப் போகிறது இனிதான் நான் படித்ததை என்னால் தொண்டர்களிடம் பகிர்ந்து கொள்ள முடியாதே? என்று வேதனைப்படுகிறார் அண்ணா. இதுதான் அண்ணா!.

1909 ஆம் ஆண்டு காஞ்சிவரம் நடராாசன் அண்ணாதுரையாக பிறந்த அண்ணா, 1934 ஆம்ஆண்டு தந்தை பெரியாரை நேரடியாக சந்திக்கிறார். அப்போது அவருக்கு வயது 25. 1938 முதல் தந்தைபெரியாரோடு இணைந்து பயணிக் கிறார் . பத்தாண்டுகள் கழித்து 1949ல் திமுகவை தொடங்குகிறார் அப்போது அண்ணாவின் வயது 40.



# திராவிட இயக்கத்தில் தளபதி

அடுத்த இருபது ஆண்டுகள் அரசியல் களத்தில் பயணித்த அண்ணா முதலமைச்சர் என்ற மிகப் பெரிய உயரத்தை எட்டி 60 வயதில் மரித்துப்போனார். 30 ஆண்டுகள் கல்வி, 10 ஆண்டுகள் சமூகப்பணி, இருபது ஆண்டுகள் அரசியல் களம் என எளிதாக அண்ணாவை வரையறை செய்யலாம்.

தீராத அறிவுத்தேடலோடு இணையற்ற சமூக சிந்தனை யோடு உயர்வானஅரசியலை தமிழ் பெரு நிலத்திற்குள் முன்னெடுத்த தகையாளர் அறிஞர் அண்ணா.

வேறு எந்ததலைவரும் முன்னெடுக்காதவகையில் இளையவர்களை அரசியல்படுத்தி அதிகார அடுக்கு களை நோக்கி பெரிய அளவில் நகர்த்தியவர் அண்ணா.

தன்னையொத்த தன்மையிலேயே தன் தம்பிகளை யும் வார்த்தார். படிக்க சொல்லித்தந்தார், எழுத களம் அமைத்துக் கொடுத்தார், பேச மேடைகளை எழுப்பினார், பிறகு அதிகாரத்தில் உட்காரவைத்தார். பெற்ற அறிவையும் கைக்கெட்டிய அதிகாரத்தையும் ஏழைஎளியோருக்கு எப்படிபயன்படுத்த வேண்டும் என்று சொல்லிமறைந்தவர் அண்ணா.

1957 ஆம்ஆண்டு திருச்சியில் திமுகவின் மிகப் பெரிய மாநாடு நடக்கிறது, அந்த மாநாட்டிற்கு அன்பில் அழைக்கிறார் என்று தன் தம்பிகளில் ஒருவரை முன்னிலைப்படுத்தி அழைப்பு விடுத்தவர் அண்ணா.

கொள்கைகளை மக்கள் ஏற்றுக்கொள்வார்களே யானால் சட்டப்பேரவைக்குள் வரவேண்டியதுதானே என்று காமராசர் திமுகவிற்கு சவால்விடுத்தார், அவரது சவாலை ஏற்று 1957 ஆம் ஆண்டு நடந்த திமுக மாநாட்டில் தொண்டர் களிடம் தேர்தலில் போட்டியிடலாமா? எனகருத்து கேட்க பெட்டிகளை வைத்தார் அண்ணா,

தொண்டர்தம் எண்ணத்திற்கு ஏற்ப 1962 ஆம்ஆண்டு தேர்தலில் வென்று 15 திமுக சட்டமன்ற உறுப்பினர்கள் பேரவைக்குள் நுழைந்தனர்.

பாவேந்தர் பாரதிதாசன் அண்ணாவை கடுமையாக விமர்சிப்பதாக அவரிடம் கூறிய பொழுது, கவிஞர்களே எப்பொழுதும் அப்படித்தான், கோபம் வந்தால் பேசத் தானே செய்வார்கள்! நம்மை மட்டுமா பேசுகின் றார்கள்? என்று எண்ணிக்கொள்ள வேண்டியதுதான் என்றா ராம் அண்ணா.

ஒருமுறை பாவேந்தர் பாரதிதாசனுக்கு 25 ஆயிரம் ரூபாய் நிதி திரட்டி அண்ணா அளித்தார், அப்போது பணத்தை ஒரு தட்டில் வைத்து அதை அண்ணா நீட்ட பாவேந்தரை எடுத்துக் கொள்ளச்சொன்னார். இப்படி ஒருமனிதனின் தேவையறிந்து உதவுகின்ற பாங்கும்



பண்பறிந்து விமர்சனங்களை ஏற்றுக்கொள்ளும் பாங்கும் ஒருங்கே பெற்றவர் அண்ணா.

அண்ணா எழுதிய ஓரிரவு நாடகத்தை திருச்சியில் வைத்துப் பார்க்கிறார் கல்கி, இதோ ஒரு பெர்னாட்சா தமிழ்நாட்டில் இருக்கிறார் என மனம் திறந்து அண்ணாவை பாராட்டினார்.

பெரியார் உங்களை கடுமையாக திட்டுகிறார் என்று அண்ணாவிடம் சொன்னார்கள், பெரியார் என்னை எவ்வளவோ பாராட்டி இருக்கின்றார். இப்போது திட்டு வதை பழைய பாராட்டுகளில் இருந்து கழித்துப் பார்த்தால் கூட பாராட்டுகளே மிஞ்சி நிற்கும் என்றுபதில் சொன்னவர் அண்ணா.

லட்சக்கணக்கானஇளைஞர்களின்மனதில் நம்பிக்கையை விதைத்து, சாதிமத பேதங்களைகடந்து அவர்களை ஒருதத்துவத்தின் குடையின் கீழ் ஒருங் கிணைத்து, அரசியல் களத்தில் வெற்றிபெறச்செய்து அதிகார நிழலில் அமரவைத்து ஒருதலைமுறையையே செழுமைப்படுத்தியவர் அண்ணா.

ஜனநாயக நாட்டில் அதிகாரத்தை எளியவர்களும் அடைவதற்கான நவீன அரசியல் இயக்கம் கண்டவர் அண்ணா.

அமைப்புரீதியாகவும் தத்துவார்த்தரீதியாகவும் தன்காலத்திற்குப் பிறகும் கூடவலிமையாக இருக்கும் படியான ஒரு அரசியல் இயக்கத்தை கட்டியெழுப்பு வதற்கு ஒரு தலைவனுக்கு மிக நவீனமான பார்வை வேண்டும், அது அண்ணாவிடம் நிறையவே இருந்தது. நவீன தமிழகத்தின் சிற்பி என்று அண்ணாவை சொல்லலாம். ●



# தானாக ஓடும் கார்

பெரும்பாலான ஊர்தி விபத்துகளுக்குக் காரணம் ஒட்டுநர்களின் அலட்சியம் அல்லது அவர்களது உடல் அசதிதான் என்று புள்ளி விபரங்கள் கூறுகின்றன. சோர்வே காணாத ரோபோ இயந்திரம் போன்ற தொழில்நுட்பத்தை ஓட்டுநர் இல்லாத கார்களுக்குப் பயன்படுத்தினால் என்ன என்பதன் விளைவாக உருவானதுதான் ஓட்டுநர் இல்லாத கார். 2011ஆம் ஆண்டிலிருந்து ரோபோ கார்கள் அதாவது ஓட்டுநர் இல்லாத கார்களை இயக்கிப் பார்ப்பதற்கு அனுமதி வேண்டும் என்று கூகுள் நிர்வாகம் வலியுறுத்தியது.

2012ஆம் ஆண்டு மே மாதம் இதற்கான அனுமதியை நெவடா மாகாணம் அளித்தது. இதைத் தொடர்ந்து ஓட்டுநர் இல்லாத காரை தனது தொழில்நுட்பம் முழுவதையும் பயன்படுத்தி டொயோடா பிரியஸ் காரில் சோதித்துப் பார்த்தது கூகுள்.

இந்தியாவில் பொக்ரான் போல அமெரிக்காவில் நெவடா மாகாணம் மிகவும் பிரசித்தி பெற்றது. இங்கதான் அமெரிக்கா பெரும்பாலும் அணு குண்டு சோதனைகள் நத்தவது வழக்கம். இதைத் தொடர்ந்து தங்கள் மாகாணத்திலும் ஓட்டுநர் இல்லாத காரை சோதித்துப் பார்க்க அனுமதி அளித்தது. புளோரிடா மாகாணம். பல்வேறு கட்ட சோதனை களுக்குப் பிறகு கூகுள் நிறுவனம் தனது ஓட்டுநர் இல்லாத காரை வெளி உலகுக்கு அறிமுகம் செய்தது. இந்தக் காரில் ஸ்டீரிங் வீலும் கிடையாது, ஆக்சிலேட் டரோ, கிளட்சோ கிடையாது என்பதுதான் சிறப்பு.

இந்தக் காரை உருவாக்கும் குழுவின் தலைவராக இரப்பவர் செபாஸ்டியன் தருண். இவர் ஸ்டான்போர்டு ஆர்டிபிசியல் இன்டலிஜென்ஸ் ஆய்வகத்தின் முன்னாள் இயக்குநர் ஆவார். கூகுள் ஸ்டீரீட் வியூ உருவாக்கத்தில் இவருக்கு முக்கியப் பங் களிப்பு உண்டு. இந்தக் கார் உருவாக்கத்தில் 15 பேர் அடங்கிய வல்லுனர் குழு ஈடு பட்டது. இந்தக் கார்களில் 1.5லட்சம் டால் மப்புள்ள மின்னணு தொழில்நுட்பக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. லிடார் சிஸ்டம் கருவியும் அடங்கும். இந்தக் காரில் 64 வெலோடைன், 64 பீம் லேசர் கருவி பொருத்தப்பட்டுள்ளது. இந்த லேசர் கருவிதான் காரைச் சுற்றி முப்பரிமாணப் பதிவை பரைவடமாக காருக்கு அனுப்புகிறது.

அந்த வரைபடம் எற்கெனவே காரில் பதிவு செய்யப்பட்டுள்ள அதிக துல்லியமான வரைபடத்துடன் பொருத்திப் பார்த்து காரை செயல்படுத்தும். இதுவரை இந்தக் கார் சோதனை ஓட்டத்தில் இரண்டு இலட்சம்நிறுத்த விளககுகளில் நின்று புறப்பட்டுள்ளது. ஆறு இலட்சம் சாலை எச்சரிக்கை விளக்குகளைக் கடந்துள்ளன. சாலையில் இந்தக் காரை பதினெட்டு இலட்சம் பிற வாகனங்கள் கந்து சென்றுள்ளன. இதுவரை நடத்தப்பட்ட சோதனை ஓட்டங்களில் 12 சிறு சிறு விபத்துக்களை இந்த ஓட்டுநர் இல்லாத ஊர்திகள் சந்தித்துள்ளன. இந்த தவறுகளும் ஆளில்லா காரினால் ஏற்பட்டதல்ல. பிற ஊர்தி ஓட்டிகளின் கவனக்குறைவால் நிகழ்ந்தவைதான்.

எட்டுமுறை நிகழ்ந்த விபத்துகள் அனைத்துமே பின்புறத்திலிருந்து ஊர்திகள் மோதியதால் நிகழ்ந்தவை. விபத்தில்லா உலகைப் படைக்க இத்தகைய தொழில்நுட்பம் வரவேற்கத்தக்கதே. இனி இங்குள்ள தொழிற்சாலைகளும் கூகுள் தொழில் நுட்பத்தோடு ஓட்டுநர் இல்லா கார்களைத் தயாரிக்கும் காலம் வெகு தொலைவில் இல்லை. •

# துளிப்பா

அரைடிரவுசர்
கைசங்கிலிநாய்
NRI

கம்பத்தில்பாதிக்கொடி
காலடியில்மீதிக்கொடி
உடைந்தகட்சி

வாசலில்முறைக்கும்பையன்
முற்றத்தில்இருமும்தாத்தா
வயசுப்பெண்வீடு

முக்காடாய்முகம்மூடும்
மாராப்பாய்விலகிஓடும்
காதலிமுந்தானி

பட்டம்பெறஆசை
புன்னகைஅரசியாய்
வாய்கோணல்

கவியரங்கமேடைகளின்
மலிவுவிலைபுத்தகங்கள்
இளம்கவிஞர்கள்

இஸ்ரோவிஞ்ஞானி
காதுவைத்துபுன்னகைத்தது
எம்ஜியார்சமாதி

மாமியார்மருமகள்தகராறு
தீர்ப்புக்குதிணறுவார்
பட்டிமன்றநடுவர்

தேடியஉத்தியோகம்
கிடைத்தேவிட்டது
வீட்டோடுமாப்பிள்ளை

சந்தியாவந்தனம்
சந்தியாவுக்குவந்தனமானது
வயசுகோளாறு

முன்னேறமுன்னேறுவழிகள்
எழுதியவன்வாழ்வது
மண்குடிசை

பக்தர்கள்சாப்பிடசைவம்
சமைத்தவர்கள்சாப்பிட
கருவாட்டுகுழம்பு

காலையில்குருமாவானாலும்
விடியலில்கூவிடும்
கடமைதவறாசேவல்

ஆவேசபேச்சாளன்
கோபமாய்சொன்னான்
அமைதியாயிருக்க

...... இளந்தேவன்....
.. திருச்சி ..



பழமொழி மெய்ப்பொருள்

**முதலைக் கண்ணீர் வடிப்பது போன்று**

முதலைக் கண்ணீர் வடிப்பது போன்று என்று ஒரு பழமொழியைச் சொல்வார்கள். அதாவது அறிவியல் பூர்வமாக முதலை கண்ணீர் வடிப்பதில்லை. அதனால் இந்த அழுகை போலியானது என்பதை உணர்த்துவதற்காக அவ்வாறு சொல்லப்படுகிறது.

ஆனால், அதற்கான பொருள் அதுவல்ல, முதலை இழந்தவன் வடிக்கிற கண்ணீர் போல என்பதுதான் நாளடைவில் திரிந்து முதலைக் கண்ணிர் என்றாகிவிட்டது. அதாவது தொழிலில் முதல் போட்டு செய்தவன் இழப்பு ஏற்பட்டால் கண்ணீர் வடிப்பதைப் போன்றது என்பதை கூறவே இந்த பழமொழி உண்டானது.


**விளம்பரக் கட்டண விபரம்**

**முன்னட்டை உள்ளே ரூ.** 7,000/- **(முழுப்பக்கம்)**
**பின்னட்டை உள்ளே ரூ.** 7,000/- **(முழுப்பக்கம்)**
**பின்னட்டை ரூ.** 10,000/- **(முழுப்பக்கம்)**
**கருப்புவெள்ளை ரூ.** 5,000/-



# முருகப்பா செட்டியார்

**[நேர்மை, தொலைநோக்கு, நினைத்ததை முடிக்கும் துணிச்சல்]**

முன்னொரு தமிழ்நாட்டின் வணிக பெருமகனுடன், இப்போதைய நவீன தமிழகத்தை ஒருபோதும் ஒப்பிட முடியாது. நவீன இந்தியாவின் பொருளாதாரம் என்பது குஜராத்தின் பொருளாதாரம். குஜராத்திலும், பின்னர் மகாராஷ்டிராவிலும் தாங்களை நிலை நிறுத்திக்கொண்டால் இருமாநிலங்களே இந்தியாவின் தொழில்துறையை இன்றளவும் கையில் வைத்திருக் கிறார்கள்.


பிரபல ஒருவர் குறிப்பிட்டதுப்பேல ஒரு ரிலையன்ஸ், அம்பானி இவர்களுடன் ஒப்பிட்டால் தமிழகத்தின் மிகப்பெரிய பல நிறுவனங்களை ஒன்று சேர்த்தால்கூட கண்டைக்காய்க்கு சமம்தான் என்றார். மேலும் விடுதலைக்குப் பின் வடஇந்தியாவுக்கே வளர்ச்சித் திட்டங்களில் முன்னுரிமை அளிக்கப் பட்டது. தமிழகம் பெரும்பாலும் வஞ்சிக்கப்பட்டது என்றே சொல்லி வந்தார்கள். இப்படிப்பட்ட பின்னணியில் மகாராஷ்டிராவிற்கு அடுத்த நிலையில் தமிழகத்தில் தொழில்துறை தனித்து இருப்பதும் மேலும் வளர்ந்திருப்பதே ஒரு சாதனை என்பது பெருமித்திற்குரியது என்றார். மேலும் இன்றளவில் பல நாடுகளில் வர்த்தகம் செய்யும் ஒவ்வொரு நிறுவனத்தின் பின்னணியிலும் ஒரு குடும்பத்தின் வியாபாரம் இருக்கும். இதை நாம் ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும்.

உதாரணமாக ஏர் இந்தியா நிறுவனம் தற்போது இந்தியா மட்டுமில்லாமல் உலக நாடுகளில் தரமான வர்த்தகத்தை பெற்று நிலையான வருவாய் மற்றும் லாபத்தை பெற்று வருகிறது. ஆனால் ஏர் இந்தியா நிறுவனத்தின் உருவாக்கத்திற்கு பின்னணியில் டாடா குடும்பம் இருந்தது என்பது எத்தனை பேருக்குத் தெரியும். இப்படி குடும்ப வியாபாரமாக இருந்த பல நிறுவனங்கள் இன்று பல நாடுகளில் வியாபாரம் செய்து, பல அரசு நிறுவனங்களாகவும் மாறியுள்ளது குறிப்பிடத்தக்க செய்தி.

நம் தமிழ்நாடு வணிகத்தை எடுத்துக்கொண்டால் குறிப்பிடத்தக்க ஒரு வரலாறு கொண்ட ஒரே வணிகர் சமூகம் என்றால் நாட்டுக்கோட்டை செட்டியார் சமூகம்தான் இருந்தது.

அவர்களின் பிரதான வணிகம் முத்து, பிற்காலத்தில் வட்டித்தொழில் என்று மாறியது. காரைக்குடியை தலைமையிடமாகக் கொண்டு மட்டும் சுமார் 1500க்கும் மேற்பட்ட வட்டி நிறுவனங்கள் நடந்த காலங்கள் உண்டு.

இரண்டாம் உலகப்போரின் போது பர்மா, மலேஷியாவில் செல்வத்தையும் பல லட்ச ஏக்கர் நிலத்தையும் இழந்தபின் அவர்களும் முடங்கிப் போனார்கள். சுதந்திரத்திற்கு பிறகு தொழில் முதலீட்டின் பக்கம் அவர்கள் வந்தார்கள் என்றாலும்



ஆலோசனை, இன்சூரன்ஸ் என்ற ரீதியில் 28 வகை வகையான சோழமண்டல இன்வட்மெண்ட், டியுப் இன்வஸ்ட்மெண்ட், சாந்தி கியர்ஸ் போன்ற பிரபல நிறுவனங்கள்.

தமிழ்நாடு, கேரளம், ஆந்திரா, குஜராத், உத்தர காண்ட் என இந்தியாவில் பல்வேறு மாநிலங்களிலும், அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, சீனா, ரஷ்யா, தென்ஆப்பிரிக்கா, தாய்லாந்து, ஐக்கிய அரபு நாடுகள் போன்ற நாடுகளிலும் தொழிற்சாலைகள் உள்ளன. 234 நகரங்களில், 3200 த்திற்கும், மேற்பட்ட ஊழியர்கள். 1900ஆம் ஆண்டு தொடங்கிய தமிழ்நாடு முருகப்பா குழுமத்தின் 119 அண்டுகளின் சாதனை சரித்திரம் என்பது உச்சக்கட்ட பெருமைக்குரிய மைல்கற்கள். ஆனால் இவை அனைத்தையும் தாண்டி இன்னும் மகத்தான பெருமைகள் சில உண்டு.

நகரத்தார்கள் பெருமைகள் என்னும் நூலில் குறிப்பிட்டதுபோல அகமதாபாத் இந்திய மேலாண்மை கல்வி நிறுவனத்தின் பேராசிரியர் பாலின் கார்க் அவர்களின் கணிப்பின்படி குடும்ப வியாபாரத்தின் ஆயுட்காலம் 60 ஆண்ட்கள்தான். இதைத்தான் வியாபாரத்தின் முதல் தலைமுறை வளர்க்கும், இரண்டாம்தலைமுறை அனுபவிக்கும், மூன்றாம் தலைமுறை அழிக்கும் என்று சொல்வார்கள். இந்த விதிகளை உடைத்து ஐந்து தலைமுறைகளாக ஒரே குடும்பமாக, ஒற்றுமையாக, லாபகரமானன வியாபார குழுமத்தை தொடர்ந்து நடத்தி வருகிறார்களே இது உலகம் மேனேஜ்மெண்ட் மேதைகள் தங்கள் ஆராய்ச்சி கட்டுரைகளில் சிலாகிக்கும் சமாச்சாரம் ஆகும். அப்பேர்பட்ட தலைமுறையின் தலைமகன் முருகப்பா செட்டியாரின் வாழ்க்கை கதை ஒரு பாடமாகவே இருக்கும் என்று சொன்னால் அது மிகையல்ல.

சிவகங்கை மாவட்டத்தில், பல்லத்தூர் கிராமம். அங்கு வாழ்ந்த வந்த அருணாச்சல முருகப்பா செட்டியார்க்கு ஆறு குழந்தைகள். மூன்று ஆண்கள்: மூன்று பெண்கள். கடைக்குட்டிதான் முரகப்பா. அப்பா, செட்டியார்களின் பாரம்பரியத் தொழிலான வட்டிக்கடை நடத்தி வந்தார். சின்ன வயதிலிருந்தே பள்ளிப்படிப்போடு குடும்பத் தொழிலிலும் பயிற்சி பெற்றார். அப்போதிலிருந்தே முருகப்பாவிடமிருந்த

முருகப்பா குழுமம், ஏம்.ஏ.எம்.குழுமம் தவிர சில குழுமங்கள் அவர்கள் மேலே செல்லவில்லை. இப்படி நீங்கலாக வேறு எந்த சமூகத்திற்கும் பெரிய அளவிலான தொழில் முதலீடுகள் கிடையாது. இதில் விதிவிலக்காக பிராமணச் சமூகம் இருந்ததையும் குறிப்பிட்டே ஆக வேண்டும். ஆம் தமிழகத்தில் பிராமணர்களின் இடமே சொல்லிக்கொள்ளும் படியான தொழில் முதலீடுகள் பெரிய அளவில் எல்லாத் துறைகளிலும் இருந்தன.

டி.வி.எஸ்., சிம்சன், மெட்ராஸ் சிமெண்ட்ஸ் என்று இந்த பட்டியல் மிகப்பெரியது. காங்கிரஸ் ஆட்சி தமிழகத்தில் நடந்தபோது இந்த நிறுவனங்களில் பலவும் அந்த பின்னணியில் இருந்தன, பலன் பெற்றன. ஆனாலும் நகரத்தார்கள் என்னும் நாட்டுக்கோட்டை செட்டியார் அவர்கள் இன்றைக்கும் தமிழகத்தில் மிகப்பெரிய வியாபார சமூகமாக விளங்குகின்றனர். தமிழகத்தில் மிகப்பெரிய நிறுவனாக விளங்கும் சோழமண்டலத்தை நடத்தி வருபவர்கள் நகரத்தார் சமூகத்தை சேர்ந்தவர்கள்தான். செட்டிநாடு குழுமமும், ஸ்பின் நிறுவனமும் நகரத்தாரின் பிசினஸ் திறமைக்கு பெருமை சேர்க்கும் விதம். இதைத் தவிர பல நிறுவனங்கள் தமிழகத்தில் லாபகரமான செயல்பட்டு வருகின்றன. இன்றைய வளர்ச்சியானது ஏதோ 50, 100 ஆண்டுகளில் வந்து விடவில்லை.

கடந்த பல நூற்றாண்டுகளாகவே பிசினஸ் துறையில் நகரத்தார் சமூகத்தினர் தொடர்ந்து இருந்து வருவதால் தான் இன்றைக்கு தலைசிறந்த பிசினஸ் சமூகமாக இருக்க முடிகிறது. அந்த வகையில் ஒன்றல்ல, இரண்டல்ல, தேயிலை, காபி, ரப்பர் தோட்டங்கள், தண்ணீர், சர்க்கரை, கொசு வலை, உரம், சைக்கிள், ஸ்டீல் குழாய்கள், கார் பாகங்கள், கியர்கள், நிதி

முக்கிய குணம் துணிச்சல். அந்த கிராமிய சூழலில் பலராலும் விரும்பப்படும் மாட்டவண்டி ரேஸ் போன்ற வீர விளையாட்டுகளில் ஆர்வத்தோடு பங்கேற்பது வாடிக்கை.

இந்நிலையில், ஆசியாவில் செல்வந்த நாடாக சொர்ண பூமியாக வளம் கொழிக்கும் தங்க பூமியாக அறியப்பட்ட பர்மா, அப்போது இங்கிலாந்து அரசின் ஆட்சியின்கீழ் இருந்தது. முருகப்பாவின் தாய்மாமன் அங்கே லேவாதேவி பிசினஸ் நடத்திக் கொண்டிருந் தார். தன் மகனின் 14ஆம் வயதில் மேலும் தொழிற் பயிற்சி பெறவேண்டும் என்னும் நோக்கில் அப்பா அவரை மாமாவிடம் அனுப்பினார். செட்டியார்கள் அனுசரித்த லேவாதேவி பிசினஸின் நுணுக்கமான விவரங்கள், இரட்டைப்பதிவு, வரவு செலவு கணக்கு ஆகியவற்றில் மாமன் கடும்பயிற்சி தந்தார். ஆனால் முருகப்பா, அக்கௌண்டிங்கோடு நிறுத்திக்கொள் ளாமல் பர்மிய மொழியில் சரளமாக எழுதவும், பேசவும் பயிற்சி எடுத்தார்.

ஒருவழியாக இந்தியா திரும்பிய முருகப்பா, நம் நாட்டைவிட பர்மாவில் வாய்ப்புகள் அதிகமாக இருப்பதை உணர்ந்தார். அதனால் மறுபடியும் அங்கே திரும்பி, தேவகோட்டை ஜமின்தார் நடத்தி வந்த வங்கி ஒன்றில் வேலைக்கு சேர்ந்தார். முன்னரே வந்தபோது ஆர்வமிகுதியால் கற்ற பர்மிய மொழி அறிவால் உள்ளூர் மக்களோடு அவரால் நெருக்கமாக பழக முடிந்தது. அவர்களின் தேவைகளை புரிந்துக்கொண்டு அற்புதமான சேவைகளை தரமுடிந்தது. வாடிக்கை யாளர்கள் தேடி வந்தனர். அங்கு நாடிவந்த ஜனங் களின் பல்ஸ் பார்த்து தானே தனி வங்கி தொடங்க முடிவு செய்தார். அதன்படி 1915ஆம் ஆண்டு முரகப்பாவுக்கு அப்போதைய வயது 31. பர்மாவில் இருந்த ராமநாதன் செட்டியார் என்பவரோடு கைகோர்த்தார். மூன்று ஏ.எம்.எம். ஆர்.எம்.வங்கி தொடங்கினார். பண முதலீட்டு சமாச்சாரம் ஆயிற்றே வழக்கம்போல் முருகப்பா வுக்கும் கூட்டாளிக்கும் இடையே கருத்து வேறு பாடுகள் முட்டின. அவர் பங்கையும் முருகப்பா வாங்கினார். ஏ.எம்.எம்.ஆர்.வங்கி இப்பொழுது முழுக்க முழுக்க முருகப்பாவுக்கு சொந்தம்.

முருகப்பாவின் நேர்மை, வாக்கு சாதுரியம், பழகும் திறமை, வாடிக்கையாளர் சேவைக்கான முடிவுகள் எடுப்பதில் காட்டிய வேகம், துணிச்சல் ஆகியவற்றால் அடுத்த 20 ஆண்டுகளில் கிடுகிடுவென்று வளர்ச்சி. இலங்கை, மலேஷியா, வியட்நாம் போன்ற நாடுகளில் வங்கி கிளைகள், ரப்பர் தோட்டங்கள், டெக்ஸ்டைல் மில், இன்சூரன்ஸ், பங்கு சந்தை சேவைகள் என முருகப்பாவின் சாம்ராஜ்யம் பிரமாண்டமானது. அந்த நேரத்தில் முருகப்பாவின் வயது 50. அக்காலக் கட்டத்தில் நாட்டுக்கோட்டை செட்டியார்களின் ஒட்டுமொத்த வியாபாரமும், பெரும்பான்மையான சொத்துக்களும் பர்மாவில் இருந்தன. இந்த பொற்காலம் தொடரும் என்று நம்பினார்கள். 1920ஆம் ஆண்டு பிற்பகுதிகளில் பர்மிய மக்களுக்கும், பிரிட்டிஷார்களுக்கும் இடையே உரசல்கள் துவங்கின. இவை விடுத்தர்ல் இந்தியரின் வியாபார நடவடிக்கைகளுக்கும் பங்கம் வரும். இதை சமாளிக்க இந்தியாவில் தொழில் தொடங்குவதற்கான வலவான அடித்தளம் போடவேண்டும் என்று முன்கூட்டியே கணித்து, அது குறித்து ஆலோசனை செய்து வந்தார். ஆனால் அவர் சொல்வதைக்கேட்டு, பலரோ நல்ல கற்பனை என்று சொல்லிக்கண்டுக்கொள்ளாமல் விளக்கினார்கள்.

திட்டமிட்டபடி பர்மா சொத்துக்களை கொண்டு முருகப்பாவின் தொழில் முயற்சிகள் தொடங்கப் பட்டன. கோயம்புத்தூரில் நூற்பாலைகள் துவங்கி னார். கேரளாவில் ரப்பர் தோட்டங்களை வாங்கினார். இவை லாபகரமான முதலீடுகளாக மாறின. 1939 ஆம் ஆண்டு திருவொற்றியூரில் ஸ்டீல் பீரோக்கள், தேய்ப்புத்தாள் ஆகியவை தயாரிக்கும் தொழிற் சாலைகளை துவங்கினார். 1940ஆம் ஆண்டிற்குள் தன் முழு சொத்துக்களையும் இந்தியாவிற்கு கொண்டு வந்தார் முருகப்பா. எத்தனை தீர்க்க தரிசனமாக முடிவு இது என்பதை காலம் நிரூபித்தது.

அடுத்த சில வருடங்கள் நாட்டுகோட்டை செட்டி யார்களின் வரலாற்றில் சோகமான அத்தியாயம். மண்ணின் மைந்தர்கள் என்ற கொள்கையைக் கடைப்பிடித்த பர்மா, இந்தியர்களின் வியாபாரத்தை தேசியமய மாக்கியது. 1941ஆம் ஆண்டில் இந்த ஜப்பன் படை யெடுப்பு பர்மாவை தரைமட்டமாக்கியது. ராஜ போகத்தில் வாழ்ந்த நகரத்தார்கள் வெறும் கையோடு பிறந்த மண்ணை நோக்கி படையெடுத்தார்கள். தங்கள் மாளிகைகளில் இருந்த ரவிவர்மா ஓவியங்கள், கலைப்பொருட்கள், வீட்டு சாமான்கள் ஆகியவற்றை விற்று வாழ்க்கை நடத்த வேண்டிய கட்டாயம் இந்த நிலைக்கு ஏ.எம்.முருகப்பா குடும்பம் ஒரே ஆண்டில் தன்னுடைய 65ஆம் அகவையில் முருகப்பா மரணம் அடைந்தார். அதே வருடம் தொடங்கிய 28 பிசினஸ்களில் முருகப்பாவின் வாரிசுகள் ஆழ காலூன்றுவதற்கு அடித்தளம் போட்டு கொடுத்தவர் முருகப்பாதான்.

அநேர்மை, தொலைநோக்கு, நினைத்ததை முடிக்கும் துணிச்சல் என பாரம்பரியம் இன்றும் தொடர்கின்றன. புதிய புதிய பரிணாமங்களில் வளர்ந்து கொண்டிருக்கிறது. ஆக, சிலரால் சில சமயங்களில் எடுக்கப்பட்ட முழு முடிவுகளால் நன்மையே விலையும் என்பதை உணர்த்துகிறது அல்லவா முருகப்பாவின் இந்த வாழ்க்கை முறை.

# கண்ணீர்த் துளிகளில் கடைசிப் பயணம்



**கவிஞர் இராமன்**

கடைவிரித்த வணிகரிடம் கைவண்டி இழுத்து
கடைநாள் வரையிலும் கால்வயிறு நிரப்பி
நடைபாதை மேடைகளை நலிந்த அவர் வீடாக்கி
அடைந்து கிடக்கின்றார் அவலத்தின் உச்சத்தில்
இடையறா உழைப்பிலும் இல்லக் கிழத்தியன்பில்
தடையிலாப் பிள்ளைகளைத் தவழ விடுகின்றார்
நடைபயிலும் ஒருகுழந்தை நாலுகாலில் மறுகுழந்தை
இடையில் இன்னொன்று, இருக்கும் வயிற்றிலொன்று

உடையாக ஓட்டுத்துணி உடம்பில் சுற்றியவர்
நடைபிணமாய் வாழ்கின்ற நகரத்தின் சந்துகளில்
உடைந்து கிடக்கின்றார் அவலத்தின் உச்சத்தில்
இடையறா உழைப்பிலும் இல்லக் கிழத்தியன்பில்
கிடைக்கும் துட்டுகளில் முட்டக் குடித்துவிட்டு
நடை தளர்ந்து நிலைமறந்து நாள்தோறும் வருவதனால்
முடைநாற்றக் குடிகண்டு முகம் சுளித்த கிழத்தியவள்
தடை கூறித் தடுக்கின்றாள்! தாலியாவது மிஞ்சுமமன்று

இடைவிடாக் குடியாலிவன் ஈரல்கள் அழுகியதால்
எடைதூக்க இயலாமல் இருக்கும் நிலையறிந்த
கடை விரித்த வணிகர்களும் கைவிரித்து விட்டார்கள்
நடைமேடை படுக்கைக்குள் நாள்களை எண்ணுகிறான்
கடைநாள் காட்சிகள் கண்முன் நிழலாட
நடைபயிலும் மழலைகளும் நலிந்த மனைவியரும்
கடையாணி இல்லா கட்டைவண்டி போலானார்
விடையறியா வேதனையில் வீட்டோடு விடைபெற்றார்.

# தமிழுக்கு முன்னுரிமை!

*தமிழக அரசுப் பணியாளர், நிர்வாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் டி.ஜெயக்குமார் 2010ஆம் ஆண்டு தமிழ் வழியில் கல்வி பயின்றவர்களை அரசின் பணிகளில் முன்னுரிமை அடிப்படையில் பணி நியமனம் செய்தல் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கான சட்ட மசோதாவை தாக்கல் செய்தார். இந்தச் சட்டத்தின்படி, இனிமேல் பட்டப்படிப்பு மட்டுமின்றி பத்தாம், பன்னிரெண்டாம் வகுப்புகளிலும் தமிழ் வழியில் படித்திருந்தால் மட்டுமே அரசுப்பணியில் முன்னுரிமை வழங்கப்படும. அதாவது, பட்டப்படிப்பு தகுதிக்கான அரசுப்பணிக்கு, பட்டப் படிப்புடன் பத்தாம் பன்னிரெண்டாம் வகுப்புகளையும் தமிழ்வழியில் படித்திருக்க வேண்டும்.*

*பட்ட மேற்படிப்புத தகுதிக்கா னஅரசுப் பணிக்கு, பட்டப்படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பை தமிழ்வழிக் கல்வி மூலம் பயின்று இருக்க வேண்டும். அதே போன்று பத்தாம் வகுப்பி தகுதியுள்ள அரசுப்பணிக்கு ஆறாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்புவரை தமிழ்வழிக்கல்வியில் பயின்றிருக்க வேண்டும் என்று மசோதாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*தமிழக அரசுப் பணியிடங்களுக்கு தமிழ் வழியில் பட்டப்படிப்பு 20 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கம் வகையில் இருந்த சட்டத்தில், இட ஒதுக்கீடு பெற பத்து, பன்னிரெண்டாம் வகுப்புகளில் தமிழ் வழியில் படிக்க அவசியம் இல்லாமல் இருந்தது. இந்நிலையில், இந்த இடஒதுக்கீடுச் சட்டத்தில் தமிழக அரசு திருத்தம் கொண்டு வந்துள்ளது. இனி தமிர்வழியில் கல்வி பயின்றால் மட்டுமே டி.என்.பி.எஸ்.சி. உள்ளிட்ட அரசுப் பணிகளில் முன்னுரிமை கிடைக்கும்.*

*2016ஆம் ஆண்டு தமிர்நாடு அரசு பணியாளர்கள் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கான சட்ட மசோதாவும் சட்டசபையில் 1632020 அன்று தாக்கல் செய்யப்பட்டது. இந்த சட்ட மசோதாவை அமைச்சர் ஜெயக்குமார் தாக்கல் செய்தார். இந்தச் சட்டத்தின்படி, தேர்ச்சிக்கான மதிப்பெண் 35லிருந்து 45ஆக உயர்த்தப்படுகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.* ●

# இந்தியாவில் 40 கோடி தொழிலாளர்கள் வறுமையில் சிக்கும் அபாயம்! - ஐ.நா. எச்சரிக்கை




கொரோனா நோய்த் தொற்று பரவலால் ஏற்பட்டுள்ள தொழில் முடக்கத்தால், இந்தியாவில் சுமார் 40 கோடி தொழிலாளர்கள் வறுமையில் சிக்கும் வாய்ப்புள்ளதாக ஐ.நா சபையின் தொழிலாளர் பிரிவு அமைப்பான சர்வதேச தொழிலாளர் அமைப்பு (மிலிளி) கூறியுள்ளது.

உலக அளவில் முறைசாரா தொழிலாளர்கள் 200 கோடி பேர் இருக்கிறார்கள். இந்தியா, நைஜீரியா மற்றும் பிரேசில் நாடுகளில் முறைசாரா தொழிலாளர்கள் பெருமளவு உள்ளனர். இவர்களில் இந்தியாவில் மட்டும் 40 கோடி பேர் இருக்கிறார்கள். கொரோனாவால் ஏற்பட்டுள்ள தற்காலிகத் தொழில் முடக்கத்தால் இவர்கள் மிகக்கடுமையான ஏழ்மை நிலைக்குத் தள்ளப்படக்கூடும் என்று இந்த அமைப்பு எச்சரித்துள்ளது.

கொரோனா வைரஸ் தாக்குதல், இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் மிகப்பெரிய உலகப்பேரழிவாக உள்ளது. தொழில்கள் அனைத்துமே முடக்கப்பட்டுள்ளதால் முறை சாரா தொழிலாளர்கள் அனைவரும் வேலையின்றி தவிக்கிறார்கள். இவர்கள் பெரும்பாலும் தினக்கூலிகளாக இருப்பவர்கள். இவர்களுக்கு இ.எஸ்.ஐ., பி.எஃப் போன்ற எவ்வித தொழிலாளர் நல உதவித்திட்டங்களும் கிடையாது. பணி நிரந்தரமும் கிடையாது.

இப்படியான சூழலில், இவர்களுக்கு வேலையில்லை என்று வீட்டினுள்ளேயே அடைத்துவிட்டால், வருமானத்துக்கு வேறு எந்த வழியுமே இருப்பதில்லை. வைரஸ் தாக்குதலி லிருந்து பாதுகாத்துக்கொள்வது இவர்களுக்கு ஒரு கவலை யென்றால், வயிற்றுப்பாட்டுக்கான வருமான இழப்பு அதைவிடப் பெரிய கவலையாகும். இவர்களைப் பாதுகாப்ப தற்கான தீவிர முயற்சி எடுக்கவேண்டுமென்று சர்வதேச தொழிலாளர் அமைப்பு தெரிவித்துள்ளது.

# சோழர்களின்
## நீர்வள மேலாண்மை - வீராணம் ஏரி



தன் நாட்டு எல்லையில் எதிரியின் தொல்லை அதிகம் இருந்ததால், அரசன் தன்னுடைய மகனிடம் எதிரியிடம் போர் புரியச் சொல்லி உத்தரவிடுகிறார்.

தந்தையின் உத்தரவை மதித்து இளவரசன் தன் நாட்டு படைகளுடன் எதிரி நாட்டை நோக்கி பயணப்படுகிறான். படைகள் பயணித்து, தன்னுடைய சொந்த நகரை விட்டு நகர்ந்து எதிரியை நோக்கி சென்று கொண்டிருக்கின்றது.

நகர்ந்து கொண்டே சென்ற அந்த படை, ஒரு நாள் நகருக்கு வெளியே ஒரு இடத்தில் முகாமிட்டு தங்குகின்றது. போருக்கான நேரம் இன்னும் வரவில்லை என்பதால் முகாமில் தங்கியிருந்த படை விரர்களிடம் வேறு ஒரு பணியைச் செய்யச் சொல்லி உத்தரவிடுகிறான். அந்த இளவரசன், காவிரியில் வெள்ளம் வரும் காலங்களில் அந்த நீர் வீணாக சென்று கடலில் கலக்கின்றதே என்று வருந்திய இளவரசன், அந்த நீரை சேமிக்க எண்ணி அந்த படை வீரர்களிடம் ஒரு பெரிய ஏரியை அங்கு வெட்டச் சொல்லி உத்தரவிடுகிறான்.

இளவரசனின் உத்தரவை ஏற்று படை வீரர்கள் மிகுந்த கவனத்துடனும், பொறுப்புடனும் சுமார் 20 கிலோமீட்டர் தூரத்திற்கு பெரிய ஏரியை பல மாதங்களாக உயிரை கொடுத்து அந்த படை வீரர்கள் வெட்டி முடிக்கிறார்கள்.

வெட்டி முடித்ததும் தன்னுடைய தந்தையான முதலாம் பராந்தக சோழனின் இயற்பெயரான வீரநாராயணன் என்று பெயர் வைக்கும்படி கூறிவிட்டுப் போருக்குச் சென்றுவிடுகிறான்.

வெட்டிய அந்த ஏரியை பார்க்க அவர்களின் இளவரசன் உயிரோடு இல்லை. போருக்கு சென்ற இளவரசன் எதிரிகளிடம் வீரமாக போரிட்டு யானை மீது இருந்தவாரே இறந்து விடுகிறான். ஆனால் அவன் வெட்டுவித்த ஏரி இன்னும் உள்ளது.

ஏரி வெட்டப்பட்டு 1100 ஆண்டுகள் ஆகின்றது. சென்னையில் வாழும் ஒன்றரை கோடி பேருக்கு இன்றைக்கும் குடிக்க நீரை தந்துகொண்டு இருக்கிறது.

கடலூர் மாவட்டத்தில் பல ஊர்களுக்கு குடிநீரை விநியோகிக்கின்றது. இந்த ஏரியின் மூலமாக அந்த மாவட்டமே பயிர் செய்து பிழைக்கின்றது. ஆம் அது தான் “வீராணம் ஏரி“ என்கின்ற “வீரநாராயணன் ஏரி“.

வெட்டச் சொல்லி தன்னுடைய படைகளுக்கு உத்தரவிட்டவன் தக்கோலப் போரில் வீர மரணமடைந்து “யானை மேல் துஞ்சிய தேவன்“ என்று போற்றப்பட்ட “இராஜாதித்ய சோழன்“.

வெட்டியது சோழர்களின் படை!

பற்றற்றவர் என்று கூறப்படுவோர் அவா அற்றவரே! அவா அறாத மற்றவர்,

அவ்வளவாகப் பற்று அற்றவர் அல்லர்.



# கிங் நோய்த் தடுப்பு மற்றும் ஆய்வு நிறுவனம்

## நோய் கண்டறிதல், ஆய்வு செய்தல், உற்பத்தி செய்தல், கல்வி வழங்கல்

'நோய் வருமுன் காப்பதே சிறந்தது' என்கிற வாசகம் எல்லோருக்குமே தெரியும். ஆனால், இதற்கு நல்ல உதாரணமாகத் தொடர்ந்து பணியாற்றி வருகிறது நோய்த்தடுப்பு கிங் மருந்து மற்றும் ஆராய்ச்சி நிலையம்.ஒரு காலத்தில் ஆட்கொல்லி நோயான பெரியம்மையைத் தடுப்பதற்கான தடுப்பூசிகளைச் சேமித்து வைத்து சென்னை மாகாணம் முழுவதும் விநியோகித்த நிறுவனம் இது.

பின்னர், இங்கேயே பல்வேறு தடுப்பூசிகள் உற்பத்தி செய்யப்பட்டன. இன்று டெங்கு, சிக்கன்குனியா, பன்றிக்காய்ச்சல் உள்ளிட்ட பயங்கர நோய்களைச் சோதனை செய்யும் முக்கியத்துவம் வாய்ந்த ஆய்வுக் கூடமாகவும், ஆன்டிஜென், ஆன்டிசீரம் போன்ற நோய் கண்டறியும் மருந்துகளை உற்பத்தி செய்யும் நிறுவனமாகவும் உள்ளது.

பரபரப்பான கிண்டி தொழிற்பேட்டையின் ஓரத்தில் அடையாறின் முகத்துவாரத்தில் இருக்கும் இந்நிறுவனம் பலரின் கண்களுக்குப் புலப்படுவதில்லை. காரணம், மரங்களடர்ந்த ரம்மியமான சூழலுக்குள் கட்டடங்கள் மறைந்து கிடப்பதே! ஆனாலும் அமைதி தவழும் அந்த இடத்திலிருந்தே நோய்த் தடுப்புக்கான பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன.

இந்தியாவில் பெரியம்மை நோய் காலம் காலமாக இருந்து வந்தது. இதற்கான தீர்வாக 1802ம் வருடம் பெரியம்மை தடுப்பூசி இங்கே கொண்டு வரப்பட்டது. முதல்முதலாக அன்னா டஸ்ட்ஹால் என்ற பம்பாயைச் சேர்ந்த மூன்று வயது குழந்தைக்கு இந்தத் தடுப்பூசி போடப்பட்டது. அதன்பிறகு மெட்ராஸ், பூனா, ஹைதராபாத் போன்ற இடங்களுக்கு இந்தத் தடுப்பூசி மருந்துகள் அனுப்பி வைக்கப்பட்டன.

பின்னாளில் இந்தத் தடுப்பூசிகளைச் சேமித்து வைக்கும் இடமாக இருந்ததுதான் கிங் நிறுவனம். அன்றைய மெ?ட்ராஸ் மாகாணத்தில் பஞ்சங்களும் நோய்களும் பிரிக்க முடியாதவையாக இருந்ததால், அனைவருக்கும் தடுப்பூசி கட்டாயம் என்ற சட்டம் கொண்டு வரப்பட்டது. இந்தச் சட்டம் வந்த 1884ம் வருடமே இந்நிறுவனமும் தனது செயல்பாட்டைத் துவங்கியது.

இதன் முதல் இயக்குநர் கர்னல் வால்ட்டர் கவென் கிங் என்பவர். இந்நிறுவனத்தின் முன்னோடியாக இருந்ததால் பின்னாளில் இவர் பெயரே நிறுவனத்திற்கும் சூட்டப்பட்டது. இதில், 1884ம் வருடத்தில் இருந்து இவரின் பணிகள் முறையாகத் தொடங்கின.

ஆனால், அதற்கு முன்பே தாது வருடப் பஞ்சத்திலேயே தனது வேலைகளைச் சிறப்பாகச் செய்யத் தொடங்கி நல்ல பெயரெடுத்துவிட்டார் கிங்.ஆரம்பத்தில் மருத்துவராக வந்த கிங், மெட்ராஸ் மாகாண சுகாதார ஆணையராக 1892இல் நியமிக்கப்பட்டார். கூடவே, இந்நிறுவனத்தின் இயக்குநராகவும் பணியாற்றினார். பின்னர், 1899ம் வருடம் தடுப்பூசிப் பிரிவை கொண்டு வந்தார். தடுப்பூசி மருந்துகள் இங்கேயே உற்பத்தி செய்யப்பட்டன.

1850கள் வரை இங்கிலாந்தில் இருந்தே தடுப்பூசிகளை இறக்குமதி செய்து வந்தது இந்தியா. பின்னர், தேவை அதிகரிக்க இங்கே உற்பத்தி செய்ய முடிவெடுக்கப்பட்டது. முதலில் மிருகங்களின் நிணநீரை எடுத்து பரிசோதனை செய்யப்பட்டது.

அந்தப் பரிசோதனை ஆரம்பித்த இடம் மெட்ராஸ்.இங்கிருந்து சிவில் டிபார்ட்மெண்ட் மூலம் இந்த மருந்துகள் மெட்ராஸ் மாகாணம் முழுவதும் விநியோகிக்கப்பட்டன. தவிர, பிரிட்டிஷ் ராணுவத்திற்கும் அனுப்பப்பட்டன.

1902ம் வருடம் நுண்ணுயிரியல் பிரிவும், 1903ம் வருடம் நோய் எதிர்ப்பு மருந்துப் பிரிவும் துவக்கப்பட்டன.உடனே, கிண்டியில் ஒரு கட்டடம் கட்டத் தீர்மானிக்கப்பட்டது. அன்றைய மெட்ராஸ் கவர்னர் லார்டு ஆம்ப்தில் இதற்கு ஒப்புதல் அளிக்க 1903ம் வருடம் கட்டடம் கட்டும் பணி தொடங்கியது. இதைக் கட்டட ஒப்பந்ததாரர் மாசிலாமணி முதலியார் இந்தோ சாராசெனிக் பாணி கட்டடக் கலையில் கட்டினார்.

இரண்டு வருடங்களில் பணி முடிக்கப்பட்டு 1905ம் வருடம் மார்ச் 11ம் தேதி கவர்னர் லார்டு ஆம்ப்தில் திறந்து வைத்தார். பின்னர், 1914ல் மீண்டும் கட்டடம் விரிவுபடுத்தப்பட்டது. இதையும் ஒப்பந்ததாரர் மாசிலாமணி முதலியாரே செய்தார். இந்த சிவப்பு வண்ணக் கட்டடம்தான் இன்று கிண்டியில் இருக்கும் கிங் நோய்த்தடுப்பு மருந்து மற்றும் ஆராய்ச்சி நிலையம்.

அன்று இந்நிறுவனம் மத்திய தடுப்பூசிக் கிடங்கு, மாகாண நுண்ணுயிரியல் ஆய்வகம் மற்றும் பொது சுகாதார ஆய்வகம் என மூன்றுவிதமான பணிகளைச் செய்தது.இதற்கிடையே இந்தியாவில் காலரா, பிளேக் போன்ற தொற்றுநோய்கள் பரவின. இதற்கான தடுப்பூசிகளைக் கண்டறிந்திருந்த முதல் நுண்ணுயிரியலாளர் வால்டெமர் ஹாஃப்கின் இதனை இந்தியாவில் வெற்றிகரமாகப் பரிசோதித்தார். இதன்பிறகு, இந்தத் தடுப்பூசிகளும் இங்கே உற்பத்தி செய்யப்பட்டன.

இந்நேரம் ஆணையர் கிங், The Cultivation of Animal Vaccine (1891), Plague Inspector’s Manual (1902), Sanitary Rules for the Prevention of Plague in Municipalities (1903) போன்ற நூல்களையும் எழுதியிருந்தார். இவர் 1906ல் இங்கிருந்து விடைபெற்றதும் கேப்டன் கிறிஸ்டோபர் என்பவர் இயக்குநராக நியமிக்கப்பட்டார். இவருக்குப் பின் 1917ம் வருடம் நியமிக்கப்பட்ட டாக்டர் கேசவபாய் என்பவரே இந் நிறுவனத்தின் முதல் இந்திய இயக்குநர் ஆவார்.

இவர் காலத்தின்போது முதல் உலகப் போர் நடந்தது. அப்போது கிழக்கு ஆப்ரிக்காவில் இருந்த துணைநிலை ராணுவத்திற்கு இங்கிருந்து அதிகமான தடுப்பு மருந்துகள் அனுப்பி வைக்கப்பட்டன.

மட்டுமல்ல, 1919ம் வருடம் இந்தியாவில் முதல் முறையாக தொற்றுக் காய்ச்சலுக்கான தடுப்பு மருந்துகள் இங்கே அதிகளவில் உற்பத்தி செய்யப் பட்டு ராணுவத்திற்கும் மக்களின் பயன்பாட்டிற்கும் அனுப்பப்பட்டன. தவிர, காலரா, டைபாய்டு போன்ற நோய்களுக்கான தடுப்பு மருந்துகளும் அதிகளவில் உற்பத்தி செய்யப்பட்டு பொதுமக்களுக்கு எளிய விலையில் கொடுக்கப்பட்டன.

இப்படியான நிறுவனம் சுதந்திரத்திற்குப் பிறகு பல்வேறு மாற்றங்களைக் கண்டது. இதனுடனே தண்ணீர் மற்றும் உணவுக்கான ஆய்வகங்களும் இருந்தன. பின்னர் இவை தனித்தனியாகப் பிரிந்து விட்டன. கிங் நிறுவனமும் நோய் கண்டறியும் மருந்து களான ஆன்டிஜன், ஆன்டிசீரா தவிர வேறெந்த மருந்துகளையும் இப்போது உற்பத்தி செய்வதில்லை. மாறாக, இந்தியாவின் சிறந்ததொரு ஆய்வுக்கூடமாக மாறியிருக்கிறது.

**இன்று இங்கே...**

“இது 134 வருஷங்களா இயங்கிட்டு வருகிற நிறுவனம். இன்னைக்கு நாங்க நோய் கண்டறிதல், ஆய்வு செய்தல், உற்பத்தி செய்தல், கல்வி வழங்கல் என்கிற நான்கு பிரிவுகளின் கீழ் செயல்பட்டு வருகிறது நோய் கண்டறிதல் துறையில் பாக்டீரியா ஆய்வு, நோய் எதிர்ப்பியல், வைரஸ் பற்றி ஆய்வு, உயிரியல் பொருட்கள் கட்டுப்பாட்டுத் துறை எனச் சில பிரிவுகள் உள்ளன.

இதில், வைரஸ் பற்றி ஆய்வு செய்யும் வைராலஜி துறையில் டெங்கு, சிக்கன்குனியா, தட்டம்மை, மூளைக்காய்ச்சல், ஃப்ளூ வைரஸ், பன்றிக்காய்ச்சல், போலியோ, ஜிகா, ஹெபடைட்டிஸ் உள்ளிட்ட 29 வகையான நோய்களுக்கு ஆய்வு செய்யப்படுகிறது. அதாவது அரசு மற்றும் சில தனியார் மருத்துவ மனைகளில் இருந்து என்ன நோய் என்பதைக் கண்டறிய மாதிரிகள் வரும். அதைச் சரியாகக் கண்டறிந்து நாங்கள் ரிசல்ட் கொடுப்போம். அதற்கான மேம்பட்ட ஆய்வகங்கள் இங்கே உள்ளன.

உயிரியல் பொருட்கள் கட்டுப்பாட்டுத் துறையின் வழியாக மருந்துகளும், ஊசிகளும் தரமானதா? என்பதை பரிசோதனை செய்கிறோம். தமிழகத்தில்

அங்கீகரிக்கப்பட்ட மருந்துகள், ஊசிகள் மட்டும் இதில் அடங்கும். தவிர, இந்தத் துறையே பன்னாட்டு தடுப்பு ஊசி மையத்தையும் கவனித்து வருகிறது.

அதாவது, சில வெளிநாடுகளுக்குச் செல்பவர்கள் கட்டாயம் மஞ்சள் காய்ச்சல் தடுப்பூசி போட வேண்டும் என்பது விதி. தமிழகத்தில் இங்கேயும், துறைமுகத்திலும் மட்டுமே இந்த ஊசி போடப்பட்டு வருகிறது. இந்த ஊசி போடும் மையமாக கிங் நிறுவனத்தை உலக சுகாதார நிறுவனம் அங்கீகரித்துள்ளது. அதனால், ஊசி போட்டதற்கான சான்றிதழும் இங்கே வழங்கப் படுன்றது.

மட்டுமல்ல, ஹஜ் யாத்திரை மேற்கொள்பவர்களுக்கு மூளைக்காய்ச்சல் தடுப்பூசி போடுவதும் எங்கள் பணிதான். தவிர, வெளிநாடு செல்லும் அனைவருக்கும் போலியோ சொட்டு மருந்தும் போட்டு வருகிறோம். உலக சுகாதார நிறுவனத்துடன் இணைந்து தேசிய போலியோ ஆய்வகமும் இங்கே செயல்பட்டு வருகின்றது.

அடுத்து, பாக்டீரியாலஜி துறை வழியாக டைபாய்டு போன்ற நோய்களுக்குப் பரிசோதனை செய்யப்படுகிறது. இந்தத்துறையின் இன்னொரு முக்கியப் பணி வி.வி.ஐ.பிகள் வரும்போது அவர்களுக்கு அளிக்கப்படும் உணவுகளை முன்கூட்டியே பரிசோதனை செய்து அறிக்கை அளிப்பது.நோய் எதிர்ப்பியல் துறையில் பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனுடன் தற்போது திசு வளர்ப்பு ஆய்வகமும் உள்ளது. திசுக்களை பதப்படுத்தி தேவைப்படுவோருக்கு வழங்கப்படுகிறது. அப்புறம், பாம்புக்கடிக்கான எதிர்ப்பு மருந்தும் இங்கே உற்பத்தி செய்யப்படுகின்றது. கல்வியைப் பொறுத்தவரை டி.எம்.எல்.டி எனப்படும் (Diploma in Medical Laboratory Technology) இரண்டு வருட கோர்ஸ் நடத்தப்படுகிறது இப்போது 45 பேர் டிக்கிறார்கள். தவிர, தேர்வு வாரியமாகவும் இந்த நிறுவனம் இருக்கிறது.

பெரியம்மை நோயை முற்றிலுமா அழித்த பெருமை கிங் இன்ஸ்டிட்யூட்டுக்கு உண்டென்றால் அது மிகையான கூற்று அல்ல. ஆப்பிரிக்க, தென் அமெரிக்க நாடுகளில் எ இ டி இ எஸ் என்ற கொசுவால் மக்களுக்கு மஞ்சள் காய்ச்சலுக்கு மருந்து தயாரிக்கும் உரிமையை உலக சுகாதார அமைப்பிடம் பெற்று, மருந்து தயாரித்து அனுப்பியது கிண்டி கிங் இன்ஸ்டிட்யூட்.

கிங் இன்ஸ்டிட்யூட் நிறுவனம் பாக்டீரியா, வைரஸ் நோய்களுக்கான பரிந்துரை நடுவங்களில் ஒன்றாகச் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தில் பல பிரிவுகள் இயங்கி வருகின்றன. இந்தப் பிரிவுகளில் பன்னாட்டு தடுப்பூசி நடுவம், துணை மருத்துவக் கல்வி வாரியம், ஆராய்ச்சித் தொழில் நுட்பப் பள்ளி போன்றவை முக்கியமானவைகளாகும். சி சி1 மருந்துகளின் தரக் கட்டுப்பாட்டினைத் தக்க வைத்துக் கொள்ளல், பாம்புக்கடிக்கான எதிர்ப்பு நஞ்சு தயாரித்தல், எதிர் வினை கண்டறிதல் (ஆன்டிஜென்கள், ஆன்டிசெரா) பாக்டீரியா, வைரஸ் நோய்களைக் கண்டறிதல், உணவு மாதிர் சோனை ஆகியவற்றைப் பராமரித்தல் போன்ற பணிகளும் இங்கு நடைபெற்று வருகின்றன. பாக்டீரியாக்களைக் கட்டுப்பாடான இடத்தில் வைத்து வளர்த்துக் கொடுத்தல், ஆராயச்சிக்காக சிறிய விலங்குகளை வளர்த்துக் கொடுத்தல் போன்ற செயல்பாடுகளும் இங்கு உண்டு.

ஜி.எல்.பி. என்று சொல்லக்கூடிய Good Lap Practice Certificate இந்நிறுவனம் பெற்றிருக்கிறது. இங்கு மருந்துகள் தர நிர்ணயம் செய்யப்படுகின்றன. மருத்துவத்துறையில் பல சான்றுகளை, இசைவுகளை இந்நிறுவனம் பெற்றிருக்கிறது என்பது பாராட்டத்தக்கதாகும்.

தடுப்பூசியின் தந்தை என்று போற்றப்படுகிற எட்வர்ட் ஜென்னர் அவர்கள் பெயரில் இங்கு ஜென்னர் கூடம் ஒன்று உள்ளது. இந்தக் கூடத்தில் 250 பேர்கள் அமர வசதி செய்யப்பட்டுள்ளது. ஜி.எம்.பி. விதிமுறைகளின் அடிப்படையில் பாம்புக்கடிக்கு தடுப்பு மருந்து, காலரா, டைபாய்டு போன்ற நோய்களுக்கு தடுப்பூசி மருந்துகளைத் தயாரிக்கும் பணியும் நடந்து வருகிறது.

பொதுமக்கள் மனங்களில் நாய்க்கடி என்றால் உடனே கிங் இன்ஸ்டிட்யூட் மட்டுமே நினைவுக்கு வரும். இங்கு நாய்க்கடிக்கான ஊசி மருந்துகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கிங் நோய்த் தடுப்பு மற்றும் ஆய்வு நிறுவனம் தமிழ்நாடு அரசின் மக்கள் நல்வாழ்வு, குடும்ப நலத் துறை, மருத்துவக் கல்வி இயக்குநரின் கீழ் செயல்பட்டு வருகிறது.

கிங் இன்ஸ்டிட்யூட்டில் குதிரைகளிலிருந்து மருந்து தயாரிப்புப்பணி நடந்ததாகவும், விலங்குகளை வதை செய்யக்கூடாது என்று முந்தைய ஆட்சியில் இருந்த நடுவண் அமைச்சர் மேனகா காந்தி அதற்குத் தடை விதித்ததாகவும் கூறப்படுகிறது. இந்நிறுவனத்தை எய்ம்ஸ் நிறுவனம் எடுத்துக்கொள்ளப்போவதாகவும் கூறப்படுகிறது.

இந்நிறுவனம், கொள்ளை நோயான கொரோனாவைத் தடுக்க அல்லது அழிக்க என்ன பங்களிப்பைச் செய்திருக்கிறது என்பதை நாம் விசாரித்தோம். சில ஊழியர்கள் விபரம் கூற மருத்துவிட்டனர். காரணம் தெரியவில்லை.

மிகவும் முக்கியமான மருத்துவ ஆராய்ச்சி நிறுவனமான கிங் இன்ஸ்டிட்யூட், இந்த இக்கட்டான கொரோனா சூழலில் என்ன செய்துகொண்டிருக்கிறது? உரிய அதிகாரிகள் மக்களுக்கு உண்மை நிலையை உரைப்பார்களா? ●

# தலை சிறந்த நீதியரசர்களில் ஒருவர்
# பி.வி. ராஜ்மன்னார்

இந்தியாவின் தலை சிறந்த நீதிபதிகளில் ஒருவர் பி.வி.ராஜ்மன்னார். சென்னையிலேயே பிறந்து சென்னையிலேயே வளர்ந்து, சென்னை உயர்நீதிமன் றத்தின் தலைவராகப் பல ஆண்டுகள் பதவியில் இருந்தார். எந்தவித பாகுபாடுமின்றி சட்டப்படி நியா யத்தை வழங்கியவர். எல்லாவகையான சட்டங்களின் நுணுக்கங்களையும் கரைத்துக் குடித்தவர். அவற்றை எளிமையான முறையில் தன்னுடைய தீர்ப்புகளில் எடுத்துச் சொன்ன நீதிபதி. இவர் வெறும் புத்தகப் புழுவாக இருந்ததில்லை.

### கலைகளில் ஆர்வம்

கலைகளிலும் ஆர்வம் அதிகம். இசை, கூத்து, நாடகம், திரைப்படம் இவைகளிலெல்லாம் அதிக நாட்டம் உண்டு. இவருடைய தாய்மொழியான தெலுங்கில் நாடகங்களை எழுதியிருக்கிறார், நல்ல பேச்சாளர், எழுத்தாளர், நகைச்சுவையை அதிகம் ரசிப்பார். கலாபிமானி என்ற பலவகையான சிறப்புகள் கெண்டவர்தான் டாக்டர் பி.வி. ராஜ்மன்னார். சென்னை உயர்நீதி மன்றத்துக்கே சிறப்பும், அழகும், மெருகும் ஊட்டியவர் இவர்.

### பிறப்பு, குடும்பம், படிப்பு

இவருடைய முழுப்பெயர் பாகால வெங்கட ராஜ்மன்னார். இவர் 1901ஆம் ஆண்டு மே மாதம் 10ஆம் நாளன்று சென்னையில் பிறந்தார். இவருடைய தந்தையின் பெயர் பி. வெங்கட ரமணராவ். இவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதிபதியாகவும், மைசூர் தலைமை நீதிபதியாகவும் இருந்து புகழ் பெற்றார். ராஜ்மன்னாரின் தொடக்கக்கால கல்வி சென்னை தங்கச்சாலைப் பகுதியிலிருக்கும் பழமை வாய்ந்த தொண்ட மண்டலம் துளுவ வெள்ளான உயர்நிலைப் பள்ளியில் நடந்தது. அந்தக் காலத்தில் சென்னை கிறிஸ்துவக் கல்லூரி சென்னை உயர்நீதிமன்றத்திற்கு எதிரில் இருந்தது. பள்ளிப்படிப்பு முடிந்ததும் ராஜம்ன்னார் கிறிஸ்துவக் கல்லூரியில் சேர்ந்து படித்து பி.ஏ.பட்டம் பெற்றார். ராஜ்மன்னார் கல்லூரியில் கார்டோஸர், மில்லர் பரிசுகளை பெற்றார்.

### சட்டக் கல்லூரியில்

பி.ஏ. டிகிரி பரீட்சையில் ஆங்கிலத்தில் முதல் வகுப்பில் தேறினார். தத்துவ சாத்திரத்தில் சென்னை மாகாணத்திலேயே முதல் மாணவனாக வெற்றி



பெற்றார். தந்தைக்கு ஏற்ற பிள்ளையாக இவரும் சட்டக்கல்லூரியில் சேர்ந்து படித்தார். பி.எல். பரீட்சையிலும் இவருக்குப் பெரும் அளவில் வெற்றி கிடைத்தது.

### இலக்கியத்தில் ஆர்வம்

கல்லூரியில் படிக்கின்ற காலத்திலேயே இவருக்கு இலக்கியத்தில் ஆர்வம் அதிகம். ஆங்கிலம், சமஸ் கிருதம், தெலுங்கு இலக்கியங்களை நன்றாக கற்றுத் தேர்ந்திருந்தார். இவருக்குத் தெலுங்குக் கவிதைகளி லும், கவிஞர்களிடமும் நாட்டம் அதிகம். அதைவிட நாடகங்களைப் பார்ப்பதிலும் இவர் அதிக அக்கறை செலுத்தினார். தென்னாடெங்கும் பிரபலமடைந்த தெலுங்கு நாடகக் கலைஞர்கள் அடிக்கடி சென்னைக்கு வந்து சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு பப்ளிக் ஹாலில் நாடகங்கள் நடத்துவார்கள். அந்த நாடகங் களையெல்லாம் ராஜ்மன்னார் தவறாமல் பார்ப்பார்.

### முன்னணி வக்கீல்

1924ஆம் ஆண்டு இவர் சென்னையில் வக்கீல் வாழ்க்கையைத் தொடங்கினார். சென்னையில் புகழ்பெற்ற வக்கீலாக இருந்த தன்னுடைய தந்தை வெங்கட ரமணராவிடமே, முதல்முதலில் ஜூனியராகப் பணியாற்றினார். வெள்ளைக்கார பாரிஸ்டர்கள் புகழ் பெற்று விளங்கிக் கொண்டிருந்த காலத்திலேயே வக்கீல்களுக்கு இடையே பலத்த போட்டிகள் இருந்தது. அந்தப் போட்டியிலுள்ள முக்கியமானவர்களில் ராஜ்மன்னாரும் ஒருவர்.

தந்தையின் நிழலிருந்து ஒதுங்கி தன்னுடைய திறமை முயற்சிகளினாலேயே சென்னையின் முன்னணி வக்கீலாக வெற்றி பெற்றார். இவருடைய ஆங்கிலப் பேச்சுவன்மை, சட்ட அறிவு, எல்லோருடனும் இனி மையாகப் பழகும் தன்மை. நகைச்சுவையின் மீது விருப்பம், அறிஞர்கள், பெரியவர்கள் போன்றவர் களிடம் காட்டும் மரியாதை இவையெல்லாமே இவருக் குப் புகழையும், பெயரையும் தேடிக்கொடுத்தன.

### ராஜ்மன்னாரின் திறமை

ராஜ்மன்னார் கோர்ட்டில் வாதாடும்போது தடுமாற்றமோ, தயக்கமோ இருக்காது. முகத்தில் சிறிது புன்னகையுடன் எந்தவித சத்தமுமில்லாமல் வழக்கை சுவையான முறையில் நடத்தும் அழகு, பலரையும் கவர்ந்தது. சென்னை நகரத்தில் மட்டுமல்லாமல், சென்னை மாகாணத்திலுள்ள பல்வேறு ஊர்களிலிருந் தும் வழக்குகளை வாதாட இவருக்கு அழைப்புகள் வந்தன. அவர்களில் பல பணக்காரர்கள், ஜமீன்தாரர் கள், பிரபல நிறுவனங்கள் போன்றவை குறிப்பிடத் தக்கது.

### அட்வகேட் ஜெனரல் பதவி

1944ஆம் ஆண்டு இந்தியாவின் தலைசிறந்த சட்டமேதைகளில் ஒருவரானவர், சர் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர். இவர் சென்னை அட்வகேட் ஜெனரல் பதவியில் இருந்தார். அவர் அந்தப் பதவியிலிருந்து ஓய்வுபெற்றபோது அந்த இடத்திற்கு அன்றைய பிரிட்டிஷ் இந்திய அரசு ராஜ்மன்னாரைத் தேர்ந்தெடுத்தது. சர் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் வரலாறு படைத்த வக்கீல். அந்தக் காலத்தில் சட்டத்தின் இருப்பிமாகக் கருதப்பட்டவர். அவர் இருந்த இடத்தை அன்றைக்கு யாராலும் நிரப்ப முடியாது. ஆனால் ராஜ்மன்னார் எல்லோரும் புகழும் வகையில் அந்த இடத்தை நிரப்பினார். அப்போது ராஜ்மன்னாருக்கு வயது 43. சாதாரணமாக அந்த நாளில் அந்த வயதுக்காரர்களுக்கு அப்படிப்பட்ட உயர் பதவியை யாருக்கும் கொடுக்க முன்வர மாட்டார்கள். அதுவும் ராஜ்மன்னாரின் சாதனை களில் ஒன்று.

### லட்சுமி காந்தன் கொலை வழக்கு

அட்வகேட் ஜெனரலாக ராஜ்மன்னார் நடத்திய பல வழக்குகளில் வரலாறு படைத்து, அன்றும் இன்றும் பரபரப்பாகப் பேசப்பட்ட வழக்கு லட்சுமி காந்தன் கொலை வழக்கு. 1944ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8ஆம் தேதியன்று லட்சுமி காந்தன் கொலை செய்யப்பட்டார். அவரைக் கொலை செய்த குற்றத்திற் காக எட்டு பேர்கள் கைது செய்யப்பட்டார்கள். அவர் களின் மூன்று பேர்கள் மிகவும் புகழ் பெற்றார்கள். அவர்களில் முதலாமவர் தென்னிந்திய கலை உலகின் உச்சியில் இருந்த அன்றைய சூப்பர் ஸ்டார் எம்.கே. தியாகராஜ பாகவதர்: இரண்டாமவர் நகைச்சுவை மன்னனும், சீர்திருத்தவாதியுமான கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், மூன்றாமவர் கோவைப்பட அதிபர் எஸ்.எம். ஸ்ரீராமுலு நாயுடு. குறிப்பாக பாகவ தரும், என்.எஸ்.கிருஷ்ணனும் கைது செய்யப் பட்ட செய்தி தென்னாட்டையே உலுக்கியது.

### வி.எல். எத்திராஜுக்குப் பதிலாக ராஜ் மன்னார்

லட்சுமி காந்தன் கொலை வழக்கு, விசாரணைக்கு வந்த நேரத்தில் பிரபல கிரிமினல் வக்கீலான வி.எல். எத்திராஜ் தான் பப்ளிக் புராசிக்யூட்டராக இருந்தார். இவர் தான் அரசு சார்பில் இந்த வழக்கை நடத்தி யிருக்க வேண்டும். ஆனால் பல சட்ட சிக்கல்களின் காரணமாக, வழக்கை நடத்த எத்திராஜ் மறுத்து விட்டார். எனவே, இந்த வழக்கை நடத்த பிவி. ராஜ் மன்னார் நியமிக்கப்பட்டார். சாதாரணமாக அட்வகேட் ஜெனரல்கள் கிரிமினல் வழக்குகளில் வாதாடுவது இல்லை. இந்த வழக்கில் முதல்முறையாக ஓர் அட்வகேட் ஜெனரல் வாதாட முன் வந்தது ஒரு தனிப்பட்ட செய்தி. பெரும்பாலான அட்வகேட் ஜெனரல்கள் சிவில் வழக்குகளை நடத்துபவர்களா கத்தான் இருப்பார்கள். அந்த காலத்தில் கிரிமினல் வழக்குகளை நடத்துவது மரியாதைக் குறைவான செயல்

என்ற எண்ணமுள்ள வக்கீல்களும் நிறைய பேர்கள் இருந்தார்கள்.

**உயர் நீதிபதி**

1946ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் ராஜ்மன்னார் சென்னை உயர்நீதிபதியாக நியமிக்கப்பட்டார். நீதிபதியாக ராஜ்மன்னார் விரைவிலேயே புகழ் அடைந்தார். வழக்குக் கட்டுகளைச் சரியாகப் படிக்காமல், சட்டத்தைப் புரிந்து கொள்ளாமல் வாதிடும் வக்கீல்களை எப்படி மடக்குவது என்ற திறமையும் இவரிடம் நிறையவே இருந்தது. வக்கீலாக இருக்கும் போதே இவருக்குச் சட்ட விஷயங்களையும், பகுத்றிவுக் கண்ணோட்டத்தில் ஆராய்ந்து பார்க்கும் திறமை அதிகம் இருந்தது. 1947ஆம் ஆண்டு ராஜ்மன்னார் சென்னை பிரதம நீதிபதியாக நியமிக்கப்பட்டார். இந்தப் பதவியில் அவர் 14 ஆண்டுகள் பேரும் புகழும் பெற்று விளங்கினார். 19571958 ஆம் ஆண்டில் சில காலம் சென்னை மாகாண கவர்னராகவும் பணி யாற்றினார்.

**பொது வாழ்க்கை**

வானொலியில் அடிக்கடி பல விஷயங்களைப் பற்றி சொற்பொரிவாற்றுவார். நகைச்சுவைத் ததும்பும் பேச்சாற்றல் இவரிடம் இருந்ததால் சொற்பொழிவு ஆற்றும் இடங்களிளெல்லாம் கூட்டம் அலை மோதியது. கர்நாடக சங்கீதம், ஓவியம், சிற்பம் இவற்றிலும் இவருக்கு ஈடுபாடு அதிகம் இருந்தது. இக்கலைகளை நல்லமுறையில் விமர்சிக்கும் திறமையும் இவரிடம் இருந்தது. சங்கித நாடக அகாடமியின் தலைவராக இவர் பணியாற்றினார். அதுபோலவே சாஹித்ய அகாடமி, சௌத் இண்டியன் லாங்குவேஜஸ் டிரஸ்ட் போன்ற நிறுவனங்களிலும் அங்கத்தினராக இருந்து கலைக்கும், இலக்கியத்துக்கும் தொண்டு செய்தார்.

**ஓய்பு பெற்ற பிறகு**

நீதிபதி பதவியிலிருந்து 1961ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார். ஓய்வு பெற்ற பிறகு வீட்டில் உட்கார்ந்து பொழுதைக்கழிக்கவில்லை. இவருடைய சட்டத் திறமையை இந்திய அரசாங்கம் பலவழிகளில் பயன்படுத்தியது. சட்டங்களை திருத்தியமைக்கும் பணிகளில் இவர் பல உதவிகளைச் செய்தார். தன்னைத் தேடிவரும் நண்பர்களுக்கு பல யோசனைகளை கூறுவார். பிவி. ராஜமன்னாரைப் போல ஒரு திறமை வாய்ந்த நீதியை இனிமேல் காண்பது மிகவும் கடினம். தன்னுடைய 78ஆவது வயதில் அதாவது 1979ஆம் ஆண்டு ராஜ்மன்னார் இயற்கை எய்தினார்.

Rajmannar committee during chief minister karunanidhi time

During the early years as chief minister, karunanidhi established some very important commissions. The first was a committee ''to study centre state relations'' and make recommendations on what powers to transfer to the states. It had always been the dream of former chief minister C.N. Annadurai (Anna) to amend the constitution in a manner as to transfer power from the centre to the states; it was kalaignar who would ac on it. During his first chief ministerial visit to new delhi, in March 1969, Karunanidhi announced in a press conference that his government was considering setting up expert committee to study centre-state relations. Later, that august, he announced the formation of a three-member committee headed by Dr. P.V. Rajamannar to examine the constitutional provisions to suggest measures to secure ''utmost autonomy of the state in the executive, legislative and judicial branches'. The recommendations of the Rajamannar Committee, submitted on May 27,1971, laid out a comprehensive road map towards more federal constitution. It made far-reaching recommendations on a broad range of subjects, from setting up an inter-state council comprising all chief ministers, with the prime Minister as chairman, to the appointment of Governors. It suggested guidelines on matters ranging from the appointed of chief ministers to the dismissal of a minority government.

Well Known Playwriter

P.V. Rajamannar is a well-known playwright, his Dayyala Lanka (Island of Ghosts) has been staged with great success. Writted when he was a rising lawyer and an idealist who could express himself freely, the play deals with a social problem of great concern-the state of the young widow who sees all the urges of youth freely accessible to her married sister but which, for no justifiable reason, are denied to her. A second play of Rajamannar, Yemi Mangavallu (Oh, these men!) is a powerful condemnation of obsolete yet tenaciously clinging ideas of propriety and the still popular insistence on one law for the man and another for the woman. Nagu Bamu (The white cobra) is a recent one-act play by him. The story takes place in the Ajanta caves during the times when the great Buddhist monk-artists embellished the walls with their wonderful frescoes. The dialogue is very effective through out, and the problem has a universal and almost topical appeal as it concerns the conflict between utter devotion to duty and the irresistible urge for emotional fulfilment-a problem which confronts each one of us today. In all his writings, rajamannar follows franz kafka's advice. Test yourself on humanity.it makes the doubtful doubt, the believer believe''

நடிகர் **ராஜேஷ்** ●

# கொரோனா எழுப்பப்படும் கேள்விகள்

தற்போதைய உலகளாவிய கொரோனா வைரஸ் தொற்றுநோய் பரவலைத் தொடர்ந்து, நோய் தொடர்பான தவறான தகவல்கள் மற்றும் வதந்தி களின் விரைவான பெருக்கம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக சமூக ஊடகங்கள் இந்த வதந்திகள் பரவுவதில் பெரும் பங்கு வகிக்கின்றது. இது குறித்து அசோகா பல்கலை கழகம் மற்றும் சென்னை கணிதவியல் கழகம் ஆகிய வற்றில் இயற்பியல் மற்றும் உயிரியல் பேராசிரி யாக பணியாற்றும் முனைவர் கவுதம் மேனன் அவர் களுடன் நேர்காணல். Translated into Tamil by Hema Prabha and TV Venkateshwaran

**கொரோனா வைரஸ் (COVID-19) என்றால் என்ன, மக்கள் ஏன் அதைப் பற்றி கவலைப்படுகிறார்கள்?**

இந்த நோயை COVID-19 (கொரோனா வைரஸ் தொற்று நோய் 2019) என்றும், அதை ஏற்படுத்தும் ஒரு வகை வைரஸ், நாவல் (புதிய ) கொரோனா வைரஸ் என்றும் அழைக்கப்படுகிறது. இது ஒரு கிரீடத்தை போல கூர்முனைகளின் தொகுப்பைக் கொண்டிருப்ப தால் கொரோனா என்று பெயரிடப்பட்டது ("கொரோனா" என்பது லத்தீன் மொழியில் கிரீடம் என்று பொருள்படும்).

பல வைரஸ்கள் மனிதர்களில் நோய்களை ஏற்படுத்துகின்றன. போலியோ, தட்டம்மை, காய்ச்சல் ("காய்ச்சல்") மற்றும் ஜலதோஷம் போன்ற நோய்கள் இதில் அடங்கும். இந்த நோய்களில் சிலவற்றுக்கு, தடுப்பூசிகள் உள்ளன. இந்த தடுப்பூசிகளில் சில , உங்கள் இளவயதில் எடுக்கும் தடுப்பூசி மருந்துகளின் ஒரு பகுதியாக அமைந்திருக்கும். சில தடுப்பூசிகள் வளர்ந்த பின்னர், வருடம் ஒருமுறை எடுத்துக் கொள்ள லாம். இந்த நோய்த்தடுப்பு மருந்துகள், உங்கள் நோயெதிர்ப்பு திறன் உங்கள் உடலில் நுழையும் வைரஸை அடையாளம் கண்டு போராட முடியும் என்பதை உறுதி செய்கின்றன.

நமது உடல் முன்பு பார்த்திராத ஒரு வைரஸை எதிர்கொள்ளும்போதுதான் பிரச்சினை ஏற்படுகிறது. பொதுவாக விலங்குகள் அல்லது பறவைகளில் பரவும் வைரஸ்கள், எடுத்துக்காட்டாக, பன்றிகள், கோழிகள் மற்றும் வெளவால்களிடம் இருக்கும் வைரஸ் எப்போதாவது, மனிதர்களுக்குள் ஊடுருவுகின்றன. இதனால் புதிய நோய்கள் ஏற்படுகின்றன. COVID19 அத்தகைய ஒரு நோய். அதற்குரிய வைரஸ் வெளவால் களில் தோன்றியதாக நம்பப்படுகிறது.

மக்கள் பல காரணங்களால் COVID-19 பற்றி கவலைப்படுகிறார்கள். முதலாவதாக, இது ஒரு சுவாசம் சம்பந்தபட்ட நோயாகும். இது நபருக்கு நபர் பரவு கிறது. இரண்டாவதாக, நோயால் பாதிக்கப்பட்ட சிறுபன்மையினர் நேரிடுகிறது.. மூன்றாவதாக, அதற்கு நமக்கு இயற்கையான நோய் எதிர்ப்பு சக்தி இல்லை. அதற்கு எதிராக தடுப்பூசிகள் எதுவும் இல்லை, மற்றும் அதற்காக நாம் எடுக்கக்கூடிய மருந்துகள் எதுவும் தற்போது இல்லை.

**இந்த நோய் மக்களை எவ்வாறு பாதிக்கிறது மற்றும் தொற்று எவ்வாறு பரவுகிறது?**

பெரும்பாலானவர்களுக்கு காய்ச்சல் போன்ற லேசான அறிகுறிகள் உள்ளன. பெரும்பாலும்,



இவற்றில் அதிக காய்ச்சல், உலர்ந்த இருமல் மற்றும் சோர்வு ஆகியவை அடங்கும். சில சந்தர்ப்பங்களில், உடல் வலி, மூச்சுத் திணறல், தசை மற்றும் மூட்டு வலி, தொண்டை வலி , தலைவலி, சளி மற்றும் அவ்வப் போது வயிற்றுப்போக்கு போன்றவையும் இருக்கலாம். இந்த நோய் இளையவர்களை விட வயதானவர்களை அதிகம் பாதிக்கிறது. 0 முதல் 9 வயதுக்குட்பட்டவர்கள் மிகவும் குறைவாக பாதிக்கப்படுகின்றனர். நீரிழிவு, இதய நோய், நுரையீரல் நோய் அல்லது குறைந்த நோய் எதிர்ப்பு சக்தி போன்ற சில வியாதிகள் ஏற்கனவே உடையவர்களை இந்த நோய் வலுவாக தாக்கக் கூடியது. நிமோனியாவை உள்ளடக்கிய இந்த நோயின் மிகவும் கடுமையான விளைவுகள் ஐந்தில் ஒரு நோயாளியிடம் காணப்படுகின்றது.

நோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் இருமும் போதோ அல்லது தும்மும் போதோ வெளிப்படும் நீர்த்துளிகள் மூலம் இந்த நோய் பெரும்பாலும் பரவுகிறது. இந்த நீர்த்துளிகள் சிந்திய பரப்பில் நீடிக்கும், பின்னர் நீங்கள் இந்த பரப்புகளைத் தொட்டபின்பு உங்கள் வாய் அல்லது முகத்தைத் தொடலாம். அப்போது உங்கள் உடலுக்குள் நுழைந்து, குறிப்பாக உங்கள் நுரையீரலை அடையும்.

**நானும் மற்றவர்களும் அதைப் பெறுவதைத் தடுக்க நான் ஏதாவது செய்ய முடியுமா?**

கண்டிப்பாக! நீங்கள் செய்யக்கூடிய விஷயம் நிறைய உள்ளது.

வைரஸ் சுவாச பாதை வழியாக பரவுகிறது, அதாவது யாரோ தும்மும்போது அல்லது இருமும் போது வெளியேற்றப்படும் சிறிய நீர்த்துளிகள் வழியாக. இந்த துளிகள் ஒருவரின் கை அல்லது கதவு போன்ற பரப்புகளில் பரவக்கூடும், அதாவது மக்கள் தொடும் எந்த இடத்திலும். அங்கிருந்து, வைரஸைச் சுமக்கும் சிறிய நீர்த்துளிகள் உங்கள் வாய் மற்றும் நுரையீரலுக்கு மாற்றப்படலாம். தீர்வு? வைரஸ் பரிமாற்றத்தைத் தடுக்க உங்கள் கைகளை கவனமாகக் கழுவுங்கள்; இதற்கு யூடியூப்பில் கிடைக்கும் சிறந்த வீடியோக் களைப் பின்பற்றுங்கள் (எ.கா.) மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் கைகளைக் கழுவ பயன்படுத்தும் நுட்பங்களை சொல்லும் காணொளிகள். உங்கள் கைகளை கழுவுவதற்கு முன்பு நீங்கள் சோப்பு மற்றும் தண்ணீருடன் குழாயின் பகுதியை கழுவுங்கள், பின்பு உங்கள் கைகளைக் கழுவுங்கள்.

உங்களிடம் தண்ணீர் மற்றும் சோப்பு இல்லையென்றால், ஆல்கஹால் சார்ந்த சானிடிசர் உபயோகியுங்கள். முடிந்தவரை முகத்தைத் தொடுவதைத் தவிர்க்கவும்.

தவிர, பாதிக்கப்பட்டவர்களுடன் உடல் தொடர்பு கொள்ள வாய்ப்புகள் அதிகரிக்கும் என்பதால் கூட்டத்தைத் தவிர்க்கவும். மற்றவர்களிடமிருந்து இத்தகைய உடல் ரீதியான பிரிவைப் பராமரிப்பது " சமூக தொலைவு" என்று அழைக்கப்படுகிறது. மக்களிடமிருந்து ஒரு "பாதுகாப்பான" தூரம் பொது வாக மூன்று முதல் ஆறு அடி வரை கருதப்படுகிறது. கைகுலுக்கு வதைத் தவிர்க்கவும். உடல் தொடர்பைக் குறைக்க "வணக்கம்" அல்லது ஆதாப் என்று சொல்லும் தமிழ் முறைகளை பின்பற்றுங்கள்.

**நான் வீட்டை விட்டு வெளியேறும் ஒவ்வொரு முறையும் முகக்கவசம் அணிய வேண்டுமா?**

முகமூடிகளை அணிவது மற்றவர்களிடம் உங்களைப் பாதுகாப்பதை விட, உங்களுக்கு நோய் இருந்தால் மற்றவர்களுக்கு அதைப் பரவாமல் தடுக்கிறது. அதற்கும் மேலாக, தனிநபர்களை விட அதிக தேவை, சுகாதாரப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு இருக்கிறது. எனவே, உங்களுக்கு சுவாச நோய் இருப்பதாக நீங்கள் சந்தேகித்தால், முகமூடியை அணியுங்கள். இல்லையென்றால் வேண்டாம்.

**எனக்கு சளி/காய்ச்சல் அறிகுறிகள் இருந்தால் நான் என்ன செய்ய வேண்டும்? நான் என்னை சோதித்துப் பார்க்க வேண்டுமா மற்றும் / அல்லது சுய தனிமைப்படுத்த வேண் டுமா?**

COVID-19 இன் அறிகுறிகள் பல பொதுவான நோய்களின் (காய்ச்சல், ஃப்ளூ போன்றவை) அறிகுறிகளை ஒத்திருப்பதால், கொரோனாவிற்கு பதிலாக வேறு ஒரு நோய் உங்களை பாதித்திருக்கலாம். நீங்கள் நோய் வாய்ப்பட்டிருப்பதாக நீங்கள் நினைத்தால், செய்ய வேண்டிய முதல் விஷயம், 'சுய தனிமைப்படுத்தல்', அதாவது வெளியே செல்லாமல் வீட்டிலோ அல்லது ஒரு இடத்திலோ தங்கியிருப்பது. இதனால், பிறருக்கு இது பரவாது. இது மிகவும் கடுமையாக கடைபிடிக்கப்பட வேண்டிய ஒன்று உங்களுக்கும், உங்கள் பராமரிப்பாளர்களுக்கும் இடையில் நேரடி அல்லது மறைமுக உடல் தொடர்பு இருக்கக்கூடாது.

சுவாச சுகாதாரத்தை கடைப்பிடிப்பது மிகவும் நல்லது, அதாவது உங்கள் முழங்கையில் அல்லது நீங்கள் பாதுகாப்பாக அப்புறப்படுத்தக்கூடிய துணி/தாளில் இருமுவது. நீங்கள் அடிக்கடி கை கழுவுவதோடு மட்டு மல்லாமல், உங்களைச் சுற்றி இருப்பவர்களையும் செய்யச் சொல்லுவது. மேலும், நன்றாக ஓய்வெடுங்கள், நிறைய திரவ ஆகாரங்களை உட்கொள்ளுங்கள், உங்கள் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க பழங்களை உண்ணுங்கள். உங்களுக்கு சுவாசிப்பதில் சிரமம் இருந்தால், ஆலோசனை தரக்கூடிய தொடர்பு எண்ணுக்கு அழைக்கவும். பொதுவாக சொல்ல வருவது, அறிவுறுத்தப்படாவிட்டால் நேரடியாக மருத்துவரை சந்திக்கச் செல்ல வேண்டாம். ஏனென்றால், நீங்கள் உண்மையில் நோய்வாய்ப்பட்டிருந்தால், நீங்கள் பயணிக்கும் வழியில் இருக்கும் அனைவரையும் பாதிப்புக்கு உள்ளாக்குவீர்கள்.

உங்களுக்கு இருமல் மற்றும் / அல்லது மூக்கு ஒழுகுதல் இருந்தால் மற்றவர்களுக்கு தொற்று ஏற்படாமல் இருக்க முகக்கவசம் அணிய வேண்டும். இல்லையெனில், முகக்கவசத்தால் எந்தப் பயனும் இல்லை.

**நோய் இருப்பதாக சந்தேகிக்கப்படுபவர்கள் 'தனிமைப் படுத்தப்படுவார்கள்' என்று கேள்விப்பட்டேன். இதன் பொருள் என்ன, இது பயப்பட வேண்டிய ஒன்றுதானா?**

*இரண்டு வகையான 'தனிமைப்படுத்தல்கள்' உள்ளன.*

*ஒன்றில், நீங்கள் அரசாங்கம் ஏற்பாடு செய்த அறைகளில் தங்கவைக்கப்படுவீர்கள், இதனால் நோய்த்தொற்று இல்லாத மற்றவர்களுடனான உங்கள் தொடர்பு கடுமையாகக் குறைகிறது. நோய் அதிகம் பரவிய ஒரு நாட்டிலிருந்து நீங்கள் இந்தியா வந்திருந்தால், இந்த முறையில் நீங்கள் தனிமைபடுத்தப்படுவீர்கள்.*

*அடுத்ததில், நீங்கள் நோய்த் தோற்று உள்ள ஒருவருடன் நீங்கள் தொடர்பு கொண்டதாக சந்தேகிக்கப்பட்டால், 'சுய தனிமைப்படுத்தலுக்கு' உள்ளாக்கப்படுவீர்கள். இதன் பொருள் நீங்கள் வீட்டிலோ அல்லது வேறு எந்த இடத்திலோ தங்க வேண்டியிருக்கும். இங்கே தங்கினால், மற்றவர்களும் பரவாது என்று நீங்கள் நினைக்கும் இடத்தில் தங்கலாம்.*

*மற்றவர்களுடனான உங்கள் உடல் தொடர்பு குறைக்கப்படுவதை 'தனிமைப்படுத்தல்' உறுதி செய்கிறது. பொதுவாக 'தனிமைப்படுத்தப்படுதல்' கால மானது இரண்டு வாரங்கள் நீடிக்கும். இரண்டு வாரங்களின் முடிவில், உங்கள் உடல்நிலையைப் பரிசோதிக்கும் சுகாதார அதிகாரிகள்/மருத்துவர்கள் உங்களுக்கு நோய்த் தோற்று இல்லை என்பதை உறுதி செய்தால், பின்பு 'தனிமைப்படுதல்' அவசியமில்லை.*

*தனிமைப்படுத்தலுக்கு பயப்பட வேண்டிய அவசியமில்லை. அதிகபட்சமாக, நமது தினசரி பழக்கங்களில் இருந்து சற்று வித்தியாசமாக இருக்கும். ஆனால் நன்கு வடிவமைக்கப்பட்ட ஒரு 'தனிமைப்படுத்தப்பட்டபடு' இடம், நீங்கள் குடும்பத்தினருடனும் நண்பர்களுடனும் தொடர்பில் இருப்பதையும், வெளி உலக நபர்களுடன் தொடர்பில் இருப்பதையும் உறுதி செய்யும். உங்களுக்கு சத்தான உணவு மற்றும் பிற வசதிகள் வழங்கப்படுவதை இது உறுதி செய்யும். இதனால் நீங்கள் தங்குவதற்கு ஏற்ற வசதிகளில் எந்த பிரச்னையும் இருக்காது.*

*நோயின் தாக்கம் குறைகிறதா இல்லையா என்பதைப் பொருத்து, தனிமைப்படுத்தல் தொடர்பான விதிமுறைகள் தொடர்ந்து மதிப்பீடு செய்யப்படும். யார் தனிமைப்படுத்தப்பட வேண்டும், யார் தேவையில்லை என்பதை தீர்மானிப்பதற்கு அரசாங்கம் இன்னும் கடுமையான விதிகளை வைத்திருக்க வாய்ப்பிருக்கிறது. இது கொரோனா பரவலைப் பொருத்தே இருக்கிறது.*

**இறைச்சி சாப்பிடுவது, அல்லது சீனாவிலிருந்து தயாரிப்புகளைப் பயன்படுத்துவதன் மூலம் தொற்று நோயைப் பெற முடியுமா?**

*கண்டிப்பாக அதற்கு வாய்ப்பே இல்லை. முதலாவதாக, இது ஒரு வைரஸ் ஆகும், இது சுவாசப் பாதை வழியாக மனிதர்களிடையே பரவுகிறது; நீங்கள் சந்திக்கும் எல்லா மிருகத்திடமும் இது தொற்றிக் கொள்ளாது. எனவே இறைச்சி சாப்பிடுவதால் கொரோனா வைரஸ் தொற்று ஏற்படுவதற்கும் எந்த தொடர்பும் இல்லை. மேலும், இது போன்ற வைரஸ்கள் பரப்பில் நீண்ட காலம் நீடிக்காது, அதிக வெப்ப நிலையையும் பொறுத்துக்கொள்ளாது. சீனாவிலிருந்து இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட ஒரு பொருள் வந்தடைய ஆகும் கால தாமதத்தில் எந்த வைரஸும் உயிரோடு தப்பிக்காது. இதனால் தொற்றுநோய்க்கு அஞ்சாமல் சீனா தயாரிப்புகளைப் பயன்படுத்தலாம்.*

**தொற்று ஏற்பட வாய்ப்புள்ளதால் பள்ளிகளும் அலுவலகங்களும் மூடப்பட வேண்டுமா?**

*தொற்றுநோயின் கட்டத்தைப் பொருத்தது. ஆரம்ப கட்டங்களிலும், உச்சத்தை அடைவதற்கு முன்பும், அதைக் கட்டுப்படுத்த முயற்சி மேற்கொள்ளப்படும் போது, பள்ளிகளை மூடுவது ஒரு பயனுள்ள உத்தி. தொற்றுநோய் பரவலாகிவிட்டால், ஏற்படும் இடையூறுகளை விட இது போன்ற நடவடிக்கைகள் பரவாயில்லை. இப்போது பல இந்திய மாநிலங்களில் பள்ளிகள் மூடப்பட்டுள்ளன.*

*பள்ளிகளும் அலுவலகங்களும் மூடப் பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும், கவலை எப்போதும் வயதானவர்களைப் பற்றியே உள்ளது. அதுவும் ஏற்கனவே பிற நோயினால் பாதிக்கப்பட்டி ருந்தால், அவர்களுக்கு கொரோனா தொற்றின் வீரியம் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. நோய்த்தொற்றுக்கு அதிக வாய்ப்புள்ளவர்களின் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்ய ஒவ்வொரு முயற்சியும் மேற்கொள்ளப்பட வேண்டும்.*

**அதற்கு எதிராக தடுப்பூசி இருக்கிறதா, அல்லது எனக்கு தொற்று ஏற்பட்டால் அதைத் தடுக்க மருந்து இருக்கிறதா?**

*இதுவரை இல்லை. உலகின் பல ஆய்வகங்களில் தயாரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வாய்ப்பு உள்ள சில தடுப்பு மருந்துகள் இனம் காணப்பட்டுள்ளன. ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. ஏற்கனவே வேறு நோய்களுக்கு பயன்பட்டு வரும் மருந்துகளில் எவை இதற்கும் உதவக்கூடும் என்ற ஆய்வும் நடைபெற்று வருகிறது. COVID-19 நோயாளிகளிடம் செலுத்தி இந்த மருந்துகளின் வீரியம் சோதனை செய்யப்பட்டு வருகிறது. பாதுகாப்பான தடுப்பூசி தயாரிக்க ஓரிரண்டு வருடங்கள் எடுக்கும்.*

**ஆயுர்வேத மூலிகைகள் ஹோமியோபதி போன்ற மருந்துகளை கொண்டு வைரஸ் தொற்று வராமல் தடுத்துக் கொள்ளலாம் என நான் கேள்விப்படுகிறேன். இவற்றை நான் நம்ப வேண்டுமா?**

*சிலர் அழுத்தமாக நம்பிக்கை கொண்டிருந்தாலும் மரபு மருத்துவம் இந்த வைரஸ் தொற்றுக்கு எவ்வளவு உதவும் என்பது குறித்து போதுமான தடயங்கள் இல்லை. இதற்கு ஆதாரமாக சில துண்டுத்துணுக் கான சம்பவங்கள் முன்வைக்கப்படுகிறது. மனமும் மருந்தும் சேர்ந்தது தான் ஆரோக்கியம், எனவே சில சமயம் உள்ளபடியே மருந்துகளின் தாக்கத்தில் குணமடையாவிட்டாலும் நம்பிக்கை தரும் மன அமைதி குணமாக*

உதவக்கூடும் இதைதான் பிளசிபோ ( ஆறுதல் மருந்து) விளைவு என்கிறோம்.

ஆயினும் சமூக தொலைவு நடவடிக்கைகள் (ஒருவருக்கு ஒருவர் குறைந்தபட்சம் ஒரு மீட்டர் இடைவெளி தருதல் போன்றவை) சுவாச சுகாதாரம் (வாய் மூக்கை மூடிக்கொண்டு மட்டுமே இறுமுவது தும்முவது) மற்றும் கைகளை கழுவுதல் போன்றவை பெரும் பலம் தரும். கிருமி நம்மை அண்டாமல் பாதுகாத்துக் கொள்ள முடியும், மற்றவர்களுக்கு பரவாமல் தடுக்க முடியும். மரபு மருந்தில் ஆபத்து வந்துவிடப் போவதில்லை. ஆனால் மரபு மருந்து கவசமாக இருந்துவிடும் என நம்பி மேற்கூறிய பாதுகாப்பு நடைமுறைகளை கைவிடாமல் இருக்கும் வரை எந்த சிக்கலும் இல்லை. அதே போல பழம், காய்கறிகள் முதலியவை நமது நோய் தடுப்பு திறனை அதிகரிக்கும். சத்தியமான சமயங்களில் சூரிய ஒளியை உடல் மீது படர செய்யுங்கள். தண்ணீர் நிறைய குடியுங்கள். பதட்டம் அடைய வேண்டாம். மன அழுத்தம் உங்களது நோய் எதிர்ப்பு சக்தியை குறைத்து விடும். இயல்பாக உங்கள் உடல் கிருமியை எதிர் கொள்ள முடியாது போகும்.

**COVID-19 பரவாமல் தடுக்க அரசு என்ன செய்கிறது?**

சர்வதேச சுகாதார நிறுவனத்தின் (WHO) அறிவுரை யின் அடிப்படையில் இந்திய அரசு பொது சுகாதார கட்டமைப்பை இயக்குகிறது. பெருகிவரும் கரோனா நோயாளிகள் எண்ணிக்கை குறித்து கவனமாக கவனித்து சுகாதார துறை அமைச்சகம் மருத்துவர்களுக் கும் மருத்துவமனைகளுக்கும் தேவையான அறிவுரை வழங்குகிறது. நோயாளிகளை தனிமை படுத்துதல் மற்றும் சிகிச்சை குறித்த முறையான அறிவுரைகளை அளிக்கிறது. இந்த வைரஸ் பாதிக்கப்பட்ட நாடுகளி லிருந்து யாரும் புதிதாக உள்ளே நுழைவதை தடை செய்துள்ளது. ஏற்கனவே வழங்கியுள்ள விசா அனைத்தையும் ரத்து செய்துவிட்டது. நோய் அல்லது கிருமி தொற்று இருக்கலாம் என கருதும் நபர்களை தனிமைப் படுத்தி மருத்துவ கண்காணிப்பு செய்யும் பல முகாம்களை ஏற்பாடு செய்துள்ளது. ஆயினும் தமக்கு நோய் இருக்கும் என கவலை கொள்பவர்கள் அனைவரையும் பரிசோதனை செய்து இனம் காணும் வசதி அமைத்துக் கொடுத்தால் நன்றாக இருக்கும். இன்னமும் இது நடைமுறையில் இல்லை.

அடுத்த சில நாட்களில் நிலைமை எப்படி போகிறது என்பதை பொருத்தே விளைவுகள் அமையும். சமூக பரவல் ஏற்பட்டுவிட்டால் அதிவிரைவில் நோய் பற்றும் நபர்கள் எண்ணிக்கை பெருமளவு கூடும். மருத்துவ துறை சமாளிக்க முடியாது போய்விடும். எனவே தான் சமூக விலக்கம் என்ற கருத்தை அரசு வலியுறுத்துகிறது. சமூக விலகல், நோய் கிருமி பரவ வாய்ப்பு உள்ளவர்களை தேடி இனம் காணுதல் மற்றும் தானே சுயமாக தனிமை படுத்தல் மேலும் நோய் அறிகுறி உள்ளவர்களை கண்காணித்தல் ஆகியவை இப்போது கைக்கொள்ளும் நடவடிக்கைகள்.

**இந்த தொற்று போய்விடுமா நீடிக்குமா? வேனில் காலம் வந்தால் கிருமி பரவல் தடைபடுமா? மறுபடி அடுத்த குளிகாலத்தில் தலைதூக்குமா?**

இதை முன் கணித்து கூறுவது மிகமிக கடினம். ஃப்ளூ போன்ற சில வைரஸ் நோய்கள் பருவ காலங் களை ஒட்டி எழும் விழும். பொதுவே குளிர் காலத்தில் கூடி வெயில் காலத்தில் குறைந்து போகும். COVID-19 நோய் ஏற்படுத்தும் வைரசும் இதே தன்மை கொண்டதா என்பது புதிர். கோடை காலத்தில் தாக்கம் மங்கி போகலாம். அலல்து ஒருவேளை குளிர்காலத்தில் இரண்டாம் அலையாக தாக்கலாம். நமக்கு தெரியாது என்பதே உண்மை.

**கரோனா வைரஸ் குறித்து நம்புதலுக்குரிய அறிவியல் பூர்வமான தகவல்களை எங்கு பெறலாம்?**

சர்வதேச சுகாதார அமைப்பு (WHO), அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவின் நிகழ மற்றும் நோய் பரவல் மற்றும் தடுப்பு அமைப்புகளின் (Centers for Disease Control and Prevention -CDC) இணையதளத்தை நாடலாம். முக்கிய செய்திதாள்களின் இணையதளங் களும் செய்திகளை தருகின்றன. கீபிளி அல்லது சுகாதார அமைச்சகத்தின் இணையதளங்கள் மூலம் உடனடி நிலவரம் மற்றும் தற்போதைய அறிவுரைகள் குறித்த தகவல்களை பெறலாம்.

**தனிநபர் எத்துனை அளவு அச்சம் கொள்ள வேண்டும்?**

நீரிழிவு, இதய நோய், நுரையீரல் நோய், ரத்தக் கொதிப்பு போன்ற வேறு எந்த நோயும் இல்லை மேலும் உங்கள் வயது அறுபதுக்கும் குறைவு என்றால் பொதுவே இந்த கிருமி உங்களை தொற்றி மறையும் போது வந்ததும் தெரியாது போனதும் தெரியாது. ஆனால் அறுபது வயதுக்கு மேல், வேறு சில நோய்கள் கொண்டவர் என்றால் உங்கள் நோய் எதிர்ப்பு சக்தி சற்றே குறைவாக இருக்கும். அப்போது அடுத்தவர் களுடன் நெருங்கி அண்டுவதை குறைத்துக்கொள்ள வேண்டும். உங்கள் வீட்டில் உள்ளவர்களிடமிருந்தும் தூரமாக இருக்க வேண்டும். உங்கள் உடல்நலத்தை கண்காணிப்பில் வைத்துக்கொள்ளவேண்டும்.

எந்த வயதுக்காரர் என்றாலும் சமூக விலகல் அறிவுரையை கடை பிடியுங்கள். அடிக்கடி கைகளை சுத்தமாக கழுவுங்கள். நோய் கிருமி தாக்கம் இருக்கும் என சந்தேகம் உள்ளவர்களிடமிருந்து விலகி இருங்கள். உங்களுக்கு இந்த நோய் இருக்கும் என நீங்கள் சந்தேகம் கொண்டால் COVID-19 ஹாட் லைன் தொலைபேசி எண்ணுக்கு தொடர்பு கொள்ளுங்கள்.

வெல்கம் டிரஸ்ட் டிபிடி அலையன்ஸ் அமைப்பின் சி.இ.ஒ ஷாஹித் ஜமீல் மற்றும் THSTI ஆய்வு நிறுவ னத்தின் செயல் இயக்குனர் ககன்தீப் காங் அவர்களுக்கு நன்றி.

*தமிழாக்கம்: இஸ்ரேலில் ஆராய்ச்சியாளராக இருக்கும் முனைவர் இ.ஹேமபிரபா மற்றும் விஞ்ஞான் பிரசார் அமைப்பில் முதுநிலை விஞ்ஞானியாக இருக்கும் த வி வெங்கடேஸ்வரன்*

●



Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5 Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 Weavers Street Triplicane, Chennai-5, Editor: **V. THALAPATHI.**



மதுரை மாவட்டம் திருமங்கலம் அமல அன்னை ஆலய நிர்வாகமும் CARES சொசைட்டியும் இணைந்து, வறுமையில் வாடுகின்ற மாற்றுத்திறனாளர்களுக்கு அரிசி, பருப்பு, எண்ணெய் உள்ளிட்ட பலசரக்குப் பொருட்களை, வட்டாட்சியரின் அறிவுத்தலின்படி, வருவாய் ஆய்வாளர்கள் திருமதி செந்தில் வள்ளி, திருமதி. ஜோதிலட்சுமி, அ.கொக்குளம் கிராம நிர்வாக அலுவலர் திரு.அன்பழகன் ஆகியோரிடம் வழங்கினர்.


நிகழ்வில் தென்தமிழக கப்புச்சியன் சபை மாநிலத் தலைவர் அருட்தந்தை எட்வர்ட்ராயன், புனித பிரான்ஸிஸ் மெட்ரிக் பள்ளியின் தலைமை ஆசிரியர் அருட்தந்தை லியோ, அமல அன்னை ஆலய ஒருங்கிணைப்பாளர் திரு.பிரைட் சிங், திருமங்கலம் மக்கள் சேவைச் சங்கத் துணைத்தலைவரும் சமூக ஆர்வலருமான மரு.ம.வில்லியம் எபனேசர், முற்றம் திங்களிதழின் மதுரை மாவட்டச் செய்தியாளர் திரு.ஜான் ஜெயராமன் ஆகியோர் கலந்துகொண்டனர்.



மதுரை திருமங்கலத்தில் வசிக்கும் மக்களுக்கு, அரிசி, கால்கறிகளை, தமிழ்நாடு சிறுபான்மை, பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத் தலைவர் திரு.ஜான் மகேந்திரன் அவர்கள் வழங்கினார்.

MUTRAM - Tamil & English Monthly RNI No. TNBIL/2010/36924.


கவிதை



# உலகம் மனிதனுக்கானது மட்டுமல்ல..!

**கவிபாஸ்கர்**





தீண்டாத
பூக்களெல்லாம்
சிரித்துஞ் குலுங்கி
வேரின் மடியில்
விளையாடுகின்றன..

இதுவரை
நாம் பார்க்காத
பறவைகளெல்லாம்
எல்லையற்ற மகிழ்வில்
வானக் கூரையிலும்
மரக்கிளைகளிலும்
கும்மாளமிட்டு பாடுகின்றனஞ்

காட்டுவிலங்குகளும்
ஊருக்குள் நுழைந்து
வீட்டு விலங்குகளோடு
ஊர்வலம் போகின்றன!

வான்வெளியில் பறந்த
விமானப் பறவைகள்
ஓடு தளத்தில்
ஓய்வு எடுப்பதைக் கண்டு
வானத்தில் பறக்கும்
கழுகுகள் எக்காளமிட்டு
சிரிக்கின்றன..

பேருந்து – தொடர்வண்டி
சக்கரங்கள்..
துருப்பிடித்துவிட்டன..

தார் சாலைகளில்
காக்கை குருவிகள்
கபடி ஆடுகின்றன..
தொழிற்சாலைகள்
வணிக நிறுனங்கள்
கேளிக்கைக் கூடங்கள்
அனைத்திலும்
பூச்சி – பூரான் – பாம்புகள்
யாரிடமும் வாடகை தராது
குடியேறிவிட்டன..

கோயில்
மசூதி
ஆலயம் யாவும்
இருளில் மூழ்கிவிட்டன
அங்கே
கடவுள் சிலைகளும்
தாம் திருடப்படாததை நினைத்து
பெருமூச்சு விடுகின்றன..

ஓரறிவு தொடங்கி
ஐந்தறிவு உயிரினங்கள் அவரை
கொரோனாவைக் கண்டு
கைத்தட்டுகின்றன!

ஆறறிவு..
உயிர் இப்போது
கதவைத் தாழிட்டு
அடங்கியிருக்கிறது!

இயற்கை படைத்த
அனைத்தும்..
விழித்துக் கொண்டன
மனிதன் படைத்த
அனைத்தும்
மௌனமாகி விட்டன

புவிப்பந்தில்
புலர்ந்த அனைத்தையும்
சுரண்டி
இறுமாப்பில் திரிந்த
மனிதன்
இப்போது
இருமிக்கொண்டு
சுருண்டு
கெடக்குறான்..

கண்காது வாய் மூக்கு
அனைத்தும்
மூடிக்கொண்டு
நிற்கும்
குரங்கு பொம்மைகள்

இப்போது
முகக்கவசம் அணிந்து
மூடிக்கொண்டு போகும்
மனிதக்
குரங்குகளை பார்த்து
பாடுகிறது..
ஆடுறா..ராமா..
ஆடு.. !

இதற்கு முன்னே
ஆடாத ஆட்டம் ஆடிய
மனிதனைப் பார்த்து..

மீண்டும்
எச்சரிக்கை செய்கிறது
கண்ணுக்குத் தெரியாத
கொரோனா!

உலகம்
மனிதனுக்கானது
மட்டுமல்ல!